விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 047 வள்ளுவர் ஆண்டு 2055 தை 21 ஞாயிற்றுக்கிழமை (04.02.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# இலங்கையின் சுதந்திர தினம்

# தமிழ் மக்களுக்கு 'கரிநாள்'

(யாழ்ப்பாணம்)

- கிளிநொச்சியில் பாரிய போராட்டத்துக்கு ஏற்பாடு.
- போராட்டத்தில் பங்குபற்றுமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் அழைப்பு.
- "கரிநாள்" போராட்டத்துக்கு பல கட்சிகள் பூரண ஆதரவு.

இன்று இடம்பெறவுள்ள இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் பாரிய போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் பெப்ரவரி 4ஆம் திகதியினை கரிநாள் எனப் பிரகடனப்படுத்தி இந்நாளில் கிளிநொச்சி நகரில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்திற்கும் பேரணிக்கும் தமிழ்மக்கள் கூட்டணி தனது பூரண ஆதரவினைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் 02

## வாழ்நாள் பேராசிரியராக புஸ்பரட்ணம்



19

## இனவாதம், மதவாதம் உள்ள இலங்கையில் சுதந்திரம் இல்லை

### ஜே.வி.பி தெரிவிப்பு




(கொழும்பு)

நாளாந்தம் இனவாத மற்றும்மதவாத பிரச்சினைகளை எதிர்நோக்கும் இலங்கையில், சுதந்திரம் என்ற ஒன்று இல்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு காலிமுகத்திடலில் சுதந்திரத்தினக் கொண்டாட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு 19

## இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் இன்று

### விழாவுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி



(கொழும்பு)

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் இன்றாகும்.

சுதந்திர தின விழாவை இன்று காலி முகத்திடலில் நடத்துவதற்கு தேவையான அனைத்து ஏற் 19

## மன்னாரில் விபத்து; மாணவன் உயிரிழப்பு

(மன்னார்)


மன்னார் பாசித்தண்டல் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

மறிச்சுக்கட்டி, மன்னாரைச் சேர்ந்த முகமட்முத்திஹம்ஷான் (வயது-19) என்ற க.பொ.த. உயர்தர மாணவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 3ஆம் திகதி மன்னார் மறிச்சுக்கட்டியிலிருந்து சிலாவத்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில்மாணவர் சென்று கொண்டி 19

## சாந்தனை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை

### சிறீதரன், மனோவிடம் ஜனாதிபதி நேரில் உறுதி



(கொழும்பு)

ராஜிவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை பெற்றுள்ள சாந்தனை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன் மற்றும் மனோ கணேசனிடம் நேரில் உறுதியளித்துள்ளார். 18

### தேர்தலை இலக்காகக் கொண்டு

## 'யுக்திய' நடவடிக்கை

### சட்டத்தரணிகள் அமைப்பு

(கொழும்பு)

தேர்தலை இலக்காகக் கொண்டு யுக்திய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என சட்டத்தரணிகள் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

மேலும், சட்டத்துக்கு எதிரான தனிப்பட்ட திட்டங்களுக்கு அமைய குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்படக் கூடாதென அந்த அமைப்பு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸூக்கு அனுப்பியுள்ள கடி 19

## கல்வி அமைச்சர் பிரேமஜயந்த

### நாளை யாழ்.விஜயம்



19

### இலங்கைக்கு கடத்தி வரப்படவிருந்த

## 4 கிலோ தங்கம்

### பாம்பன் அருகே பறிமுதல்

(சென்னை)

இலங்கைக்கு கடத்திவரப்படவிருந்த 4 கிலோ தங்கம் தமிழகத்தின் பாம்பன் கடற்கரை அருகே கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக பாம்பன் கடற்கரைக்கு தங்கக் கட்டிகள் கடத்திவரப்படவுள்ளதாக திருச்சியில் உள்ள சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 8 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி கைதடி சந்திக்கு அருகாமை

**விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.**
**வட மாகாண சபை 300 மீற்றர்**
**கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம்**

(18886)

**071 173 3911 | 076 853 5022**

## வேலைவாய்ப்பு

கனடாவில் உணவகம் மற்றும் நகைக் கடைகளில் வேலை செய்வதற்கு 3 பெண்கள் தேவைப்படுகின்றனர். வயதெல்லை 30
லண்டனில் foodcity ஒன்றிற்கு 5 ஆண்கள் தேவைப்படுகின்றனர். வயதெல்லை 21 - 27
ஆங்கில அறிவு கட்டாயமானது.
குறுகிய காலத்தில் விசா பெற்றுத் தரப்படும்.

(C-8275)

**Hybrid International hub (pvt) ltd Jaffna**

**021 222 1265, 077 815 5920, 076 250 0098**

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு சம்பியன் வீதியில் 1 பரப்பு 13 குழிக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

(18881)

**076 702 3565**

## இணையவழி(Zoom) வகுப்புக்கள்

Commerce மற்றும் சிங்களம் 10,11 ஆம் ஆண்டுக்கான வணிகமும் கணக்கீட்டு கல்வியும்(தமிழ், ஆங்கிலம்) மற்றும் அனைத்து வயதினருக்குமான சிங்கள வகுப்புக்கள், சிங்களவர்களின் உச்சரிப்புக்கு ஏற்ப பேச்சு பழக்கப்படும்.

**முதல் 2 வகுப்புக்கள் இலவசம்**

(18879)

தொடர்பு : **077 295 2365**


## அரசியலமைப்புப் பேரவை

# ஜனாதிபதி ரணிலின் பரிந்துரையை நிராகரித்தது

(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நிஷ்சங்க பந்துல கருணாரத்னவை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்திருந்த பரிந்துரையை அரசியலமைப்புப் பேரவை நிராகரித்துள்ளது.

இந்த நிராகரிப்புக்கான காரணத்தை தெரிவித்து, அரசியலமைப்புப் பேரவை ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளதாக பாராளுமன்றத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிஷ்சங்க பந்துல கருணாரத்னவை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கும் பரிந்துரையை ஜனாதிபதி, கடந்த வாரம் அரசியலமைப்புப் பேரவைக்கு அனுப்பி இருந்தார்.

ஜனாதிபதியின் இந்த பரிந்துரையை ஆராய அரசியலமைப்புப் பேரவை கடந்த 30 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடியது.

இதன் போது, பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் ஆகியோர் ஜனாதிபதி பரிந்துரைக்கு அனுமதி வழங்கினர். எனினும் பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஜனாதிபதியின் பரிந்துரையை நிராகரித்துள்ளனர்.

இதற்கு முன்னர் தேசபந்து தென்னகோனை பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுப்பி இருந்த பரிந்துரையை அரசியலமைப்புப் பேரவை நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# இலங்கையின்...

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் பெப்ரவரி 4ஆம் திகதியினை கரிநாள் எனப் பிரகடனப்படுத்தி இந் நாளில் கிளிநொச்சி நகரில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்திற்கும் பேரணிக்கும் தமிழ் மக்கள் கூட்டணி தனது பூரண ஆதரவினைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் அவர்களின் இருப்பினை இல்லாதொழிக்கும் நோக்குடன் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் மிக நுட்பமான முறையில் பறித்தெடுக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்களும் பௌத்த மயமாக்கல்களும் மிகத் தாராளமாக நடைபெறுகின்றன.

அதே நேரம் தமிழர்களை பொருளாதார ரீதியிலும் நலிவடையச் செய்யும் நோக்குடன் மட்டக்களப்பு மேய்ச்சல் தரைகளை அத்துமீறி அபகரித்தல், எமது கடல் வளங்ளைச் சுரண்டுதல் போன்ற பல அடக்கு முறைகள் தொடருகின்றன.

இந் நிலையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இக் கட்டமைப்பு சார் இனப்படுகொலைகளுக்கு தீர்வு காணும் வகையில் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து யாழ். பல்கலைக்கழக சமூகம் முன்னெடுக்கின்ற இப் போராட்டத்திற்கு நாம் பூரண ஆதரவினை தெரிவிப்பதோடு அனைத்து தரப்பினர்களும் இப் பேரணியில் கலந்து கொள்ளுமாறும் அன்போடும் உரிமையோடும் அழைக்கின்றோம் என்று

ள்ளது.

மேலும், இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ம் திகதியை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் கிளிநொச்சியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள எதிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளது. (ம-7)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் ஆசிரியர்
**திரு.இ.பாலமுரளி**
அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் துரைச்சாமி இராசையா



அவர்களின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் செபங்களை காணிக்கையாக்குகின்றோம்.

(18884)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/சென்.ஜோசப் வித்தியாலயம்**


## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு அருகாமையில் வீட்டின் மேற்தளம் (1 ஆம் மாடி), மூன்று அறைகள் மற்றும் சகல வசதிகளுடன் மாதாந்த வாடகைக்கு விடப்படும்.

(18880)

**077 378 7380**
**077 735 3720**

## Nothern Technical Institute (NTI)

Reg No: PVT 121637

**தலைமைத்துவ கருத்தரங்கு 2nd Batch**

**முதல் அமர்வு : சனி 10.02.2024**
**நேரம் : 9 மு.ப - 12 பி.ப**
**இடம் : நவாலி YMCA பிரசாத் வீதி, நவாலி தெற்கு.**

9 மணிக்கு முன் வருவோருக்கு பேருந்து கட்டணம் வழங்கப்படும். ஒழுங்கான வரவு ஒப்படைகாணுமிடத்து அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : (18865)

**077 650 5580, 076 852 5406**

## அறிவித்தல்

நெல்லியடி புதிய சந்தைக்குள் போதிய இடவசதி உண்டு. மரக்கறி வியாபாரம் செய்யும் மக்கள் வியாபாரம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்து தரப்படும். மீன் சந்தையிலும் இடம் இட வசதி உண்டு. மீன் வியாபாரம் செய்பவர்களுக்கும் வசதிகள் செய்து தரப்படும்.
விவசாயிகளும் போதிய அளவு மரக்கறிகளை கொண்டு வந்து வியாபாரம் செய்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.
அவர்களை வரவேற்கின்றோம்.

(C-8276)

**தற்போதைய சந்தை குத்தகைக்காரர்**

## Assistant Accountant Vacancy

- Exceptional Skill in Accounting Software System
- Good communication skills in English
- Minimum 2 years experience in the industry
- Age limit & Gender : Seeking for a male & Female over 21 age
- Salary will be Negotiated

If you are interested, please send your CV within 05 Days to the Following email address :

(mkpfeed2021@gmail.com)

**No.09, urumpirai Boundary Road,**
**Palali Road,**
**Kondavil,**
**Jaffna.**

(18882)

**Telephone : 021 221 5565**

## விற்பனையாளர் தேவை

எமது புடைவை நிறுவனத்திற்கு O/L, A/L படித்த ஆண்/ பெண் விற்பனை உதவியாளர் தேவை.

**சிவகணேசன் TEX**
**41, பெரியகடை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(18887)

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் இருந்து 15 நிமிடங்கள் Driving தூரத்தில் 20 million மட்டும் கொடுத்தால் போதும். மிகுதி வங்கி வசதி செய்து தரப்படும். மிகவும் அழகான மேல் மாடி வீடு Land உடன் 10.7 perch. 2700 சதுர அடியில் மிகவும் அமைதியான சூழலில், முழுவதும் வாஸ்து முறையில் அமைக்கப்பட்ட (வடக்கு வாசல் வீடு)

(C-7242)

**077 744 4422**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான சட்டமூலங்களை விலக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

**நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் என்பன மிகவும் ஆபத்தான விதத்தில் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்றன என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

"பாராளுமன்றத்தில் காணப்படுகின்ற இரண்டு சட்ட மூலங்கள் குறித்து நாட்டில் பெரும் கரிசனைகள் காணப்படுகின்றன. அவை நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்.

இரண்டும் மிகவும் பாரதூரமானவை, ஆபத்தானவை. இவை மிகவும் ஆபத்தான விதத்தில் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறுகின்றன.

இந்த சட்டமூலங்கள் ஜனநாயக வழியில் செயற்படும் மக்களை துன்புறுத்துவதற்கான தேவைக்கு அதிகமான அதிகாரங்களை அரசாங்கத்திற்கு வழங்குகின்றன.



ஜனநாயக உரிமைகளை பயன்படுத்தி அரசாங்கத்தை விமர்சிக்கின்ற மற்றும் எதிர்ப்பு தெரிவிக்கின்ற மக்களை துன்புறுத்துவதற்கான அதிகாரங்களை இந்த சட்டமூலங்கள் அரசாங்கத்திற்கு வழங்குகின்றன.

இந்த சட்டமூலங்களை விலக்கிக்கொள்ளுமாறு அரசாங்கத்திற்கு நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்" என அவர் தெரிவித்தார். (நி)

# இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார் லொஹான் ரத்வத்த

## வெளியானது வர்த்தமானி அறிவித்தல்



(கொழும்பு)

பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தனது இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில், லொஹான் ரத்வத்த எதிர்வரும் 29ஆம் திகதியுடன் இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்யவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

லொஹான் ரத்வத்தவின் நியமனம் மற்றும் இராஜினாமா தொடர்பான 2 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களை எதிர்வரும் 29ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியின் செயலாளர் வெளியிட்டுள்ளார். (நி)

# 600 சிறைக் கைதிகள் பொதுமன்னிப்பில் விடுதலை

(கொழும்பு)

ஜனாதிபதியின் விசேட பொதுமன்னிப்பின் கீழ் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 76 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் சிறையில் உள்ள 600 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை அரசியலமைப்பின் 34 ஆவது பிரிவின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, குறித்த பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


# மணிவிழா வாழ்த்துக்கள்




உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகப் பணிப்பாளரும்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்
இசைத்துறை விரிவுரையாளருமாகிய

திரு.திருமதி.

**சிவை குகநேசன்** அவர்களின்

## பணி மகிழ் விழாப் பாமாலை

பணி மகிழ் விழா முகிழ மாண்மெருகு இசைச்சிகரம்
தனி நிகராள் சிவை மஞ்சம்
தழைத்தோங்கி மிளிர்ந்ததிங்கே!
கரும்பினிய உரும்பிராயூர் கண்ட சாயி கழகம் தனை
பெரு விருப்பாய் ஸ்தாபித்த பேரொளியே சிவை குகவே,
அருங் கலையின் அற்புதங்கள் ஆற்றலுடன் உயிர்ப்புறவே
துறை சார்ந்த வளவாளாய் துணையிசைக் கலைகளையும்
முறையாகப் பயில்விக்கும் மூச்சான வியப்புருவே!

உருப் பெற்ற கழகத்தின் உன்னதமாய் வெள்ளி விழா
பெருநாளாய் கலைஞர்களை கௌரவித்த வித்தகியே
குரு மிடுக்குக் குன்றாத குலவொளியே வாழிய நீர்!

உவமையற்ற கலையெழிலாய்
உன்னதத்தின் செயலுருவாய்
சிவதுணையின் உமை நாமம்
சீர்மெருகாய் பெற்றவளே
புவனமெழில் புகழ் ஒலியாய்
பூங்காற்றில் இசையிணைய
பவனி வரும் கலையமுதே
பண்பழகின் விசை அணங்கே.

தவத்துணையாம் நேசரோடு
தளிர் அரும் சுற்றம் சூழ
அவனி நிறை இறை சக்தி
அருளூற்றுமை அரவணைக்க
நவப் பொலிவாய் நன்மையோங்க
நாயகியே நீடு வாழி!
உவப் பொலிவாய் வள நலமாய்
உன்னதமே ஓங்கி வாழி!

இடமாற்றம்
இவ்விழா பூரண நிலையம், உடையார் வீதி, ஊரெழு கிழக்கில் நடைபெற இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் இடம்மாற்றம் செய்துள்ளோம்.
உரும்பிராய் அருள்மிகு கற்பக விநாயகர் மணி மண்டபம், உரும்பிராய்.
(உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலய வடக்கு வீதி)
காலம்:- 04.02.2024 ஞாயிற்றுக்கிழமை, காலை 9.00 மணிக்கு.

வாழ்த்துவோர்:- உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள்.

(88869)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# யங்ஹென்றீசியன் அணியை வீழ்த்தி இறுதி ஆட்டத்திற்கு சென்மேரிஸ் தகுதி



உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் பரபரப்பான உதைபந்தாட்ட தொடரில் சென்மேரிஸ் அணி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட இவ்வருடத்தின் முதலாவது மாகாண தொடர் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் சென்மேரிஸ் அணியை எதிர்த்து யங்ஹென்றீசியன் அணி மோதியது.

இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஒன்றுக்கொன்று சளைத்தவர்களல்ல என்பதனை நிரூபிக்கும் முகமாக விளையாடினர். முதல் பாதியாட்டத்தில் சென்மேரிஸ் அணி வீரர் ஜெரின்சன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். சற்றும் சளைக்காத யங்ஹென்றீசியன் அணி வீரர் சுமன் ஒரு கோலைப் பதிவு செய்து ஆட்டத்தை சமநிலைப்படுத்தினார். அதன் பின்னர் யங்ஹென்றீசியன் அணி வீரர்கள், சென்மேரிஸ் அணியின் பின்கள வீரர்களையும் ஆக்கிரமித்து ஆட்டத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இதனால் முதல் பாதியாட்டத்தில் 3:1 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றீசியன் அணி முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் தமது வெற்றியை தக்க வைக்க யங்ஹென்றீசியன் அணி வீரர் முன்னேறித் தாக்குவதை குறைத்து தடுப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால் ஆட்டத்தை சமநிலைப்படுத்தியாவது ஆக வேண்டும் என சென்மேரிஸ் அணி வீரர்கள் தமது ஆட்டத்தை வேகப்படுத்தினர். இதனால் சென்மேரிஸ் அணி வீரர் ஜெரின்சன் ஒரு கோலைப் பதிவு செய்து ஆட்டத்தை சமநிலைக்குக் கொண்டு வந்தார்.

இறுதி நிமிடங்கள் இரு அணிக்கும் பலத்த சவாலாக அமைந்தது. தொடர்ந்து இரு அணிகளாலும் மேலதிக கோல்களை பதிவு செய்ய முடியாமல் போக ஆட்ட நேர முடிவில் இரு அணிளும் 3:3 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தனர். இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சென்மேரிஸ் அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. (நி-5-6-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3031

### பவிசன்

சம்பளம் மாசத்தில ஒரு தரம் தான் வரும்னு எல்லோருக்கும் தெரியும்..



ஆனா செலவு எப்ப வரும், எப்புடி வரும்னு யாருக்குமே தெரியாது.

### ரித்திகா




### மேரி

நான் என் காதலிக்கு "ஐ லவ் யூ" என்று மெசேஜ் அனுப்ப இருந்தேன். நான் ஏற்கனவே LOVE... எழுதிக் கொண்டிருக்கும் போது என் மனைவி வந்து பார்த்து விட்டார்...



உடனே நான் I LOVE My WIFE... என எழுதி உரையை முடித்துவிட்டேன்...

### கஷ்மி

உலகையே அடிமையாக்கும் உள்ளங்கையில் வாழும் மதுகுப்பி இந்த அலைபேசி...!



### ரஞ்சி

**தண்ணீர்**

தாத்தா ஆற்றில் பார்த்தார்
அப்பா கிணற்றில் பார்த்தார்
நாம் குழாயில் பார்க்கின்றோம்
மகன் பாட்டலில் பார்க்கின்றான்
பேரன் எங்கு பார்ப்பானோ!
தண்ணீரை சேமியுங்கள்..!

### வைஷாலி

மாப்பிள்ளை வீட்டார் ஏன் இப்படி தல தெறிக்க ஓடுறாங்க?

"பொண்ணுக்கு டீ போட தெரியுமா என்று மட்டும் தான் கேட்டாங்க?"
அப்புறம்..?
"பேனாவை கையிலெடுத்து ஸ்மால் டீயா... கேபிடல் டீயா?'னு மட்டும் தான் பொண்ணு கேட்டுச்சு! அதுக்கு போயி...!"

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயரில் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுச்சின்னத்தில் ஒன்றிணைந்து செயற்படத் தயார் - செல்வம் எம்.பி

(மன்னார்)

தமிழரசுக் கட்சியையும் இணைத்துக் கொண்டு பொதுச் சின்னத்தில் நாங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு எந்த விட்டுக் கொடுப்பையும் விட்டுக் கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் கட்சிகள் 5 ஒன்றிணைந்து ஓரணியில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். பொதுச் சின்னமான குத்து விளக்கு சின்னத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே நாங்கள் தமிழரசுக்கட்சியின் தனிச்சின்னத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் பயணித்தோம்.

உள்ளூராட்சிமன்றம்மற்றும்மாகாண சபைத் தேர்தல்களில் தனித்து போட்டியிட வேண்டும் என்று அவர்கள் வெளியில் சென்றதன் காரணமாக நாங்கள் ஒன்றிணைந்து செயற்படுகின்றோம். நாங்கள் அனைவரும் பொதுச் சின்னம் ஒன்றில் பயணிக்க வேண்டும் என்பதில் எங்களிடம் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறீதரனின் கூற்றை நான் வரவேற்கின்றேன். ஒரு பொதுச் சின்னத்தில் நாங்கள் அனைவரும் அணிதிரள்வோம்.

பொதுச் சின்னம் வீட்டுச் சின்னமாக இருந்தால் கூட எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என அவர் தெரிவித்தார்.(நி-285)

# மரண அறிவித்தல்

## இராமசாமி விசாலாட்சி



பிறப்பு 20.12.1934 இறப்பு 02.02.2024

சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி விசாலாட்சி 02.02.2024 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற துரையப்பா-அன்னமுத்து ஆகியோரின் அன்பு மகளும் இராமசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, செல்வரட்ணம், நவரட்ணம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், முருகமூர்த்தி (ஆசிரியர்/கொக்குவில் இந்துக்கல்லூரி) அவர்களின் அன்புத் தாயாரும் கந்தசாமி, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற மகேஸ்வரி (ஆசிரியர்) மற்றும் யோகேஸ்வரி, விக்கினேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் சிறிய தாயாரும் காலஞ்சென்ற பொன்னுச்சாமி, சதாசிவம் மற்றும் இராசலட்சுமி, மங்களேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் இராசலட்சுமி, சோதிலிங்கம், சிவகௌரி (ஜேர்மன்) மற்றும் காலஞ்சென்ற சர்வேஸ்வரசெவ்வேள் அவர்களின் அன்பு மாமியாரும் ஜசிந்தன், நிரோஜா, தர்சிகா, வஜனி, சகானா, சஞ்சயன், சனார்த்தனி ஆகியோரின் பேர்த்தியும், சதீஸ்குமார் (நியூசிலாந்து), ராஜ்குமார் (நியூசிலாந்து), தினேஸ்குமார் (நியூசிலாந்து), அர்ச்சனா (லண்டன்) ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (04.02.2024) முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாவடி ஒழுங்கை,
சுதுமலைதெற்கு. (18878) **075 181 7808**

தகவல்
இ.முருகமூர்த்தி (மகன்)

# பகிரங்க ஏல அறிவித்தல்
# கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2024.02.15-2024.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலம் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக நடைபெறும்.

**பகிரங்க ஏலம் நடைபெறும் திகதி, நேரம் :-** 2024.02.12 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணி

**பகிரங்க ஏலம் நடைபெறும் இடம்** :- கரைச்சி பிரதேச சபை, தலைமை அலுவலகம், கிளிநொச்சி.

**பகிரங்க ஏலம் விடப்படும் குத்தகை நிலையங்கள்**

| இல | குத்தகை நிலையம் | பகிரங்க ஏல இழிவுத்தொகை |
|---|---|---|
| 1 | பசுமைப்பூங்கா அழகுக்கலை நிலையம் | 13,846.99 |
| 2 | மருதநகர் இயற்கை பூங்கா | 16,935.58 |
| 3 | D8 உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 152,420.23 |
| 4 | இராமநாதபுரம் மாட்டிறைச்சிக்கடை | 228,075.75 |
| 5 | வட்டக்கச்சி சந்தை கோழியிறைச்சிக்கடை | 461,077.31 |
| 6 | வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் | 27,613.61 |
| 7 | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | 26,848.18 |
| 8 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 23,547.34 |

**நிபந்தனைகள்**

1. பகிரங்க ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் 2024.02.12 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் ரூபா.500.00 செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற முடியும்.

2. சித்தியடையும் ஏலகாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதித் தொகையினை அன்றைய தினமே உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

3. 2023.11.19 ஆம் திகதி வலம்புரி பத்திரிகையில் வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளும் கருத்திற் கொள்ளப்படும்.

**செயலாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-8273)

# இராசிபலன்

04.02.2024
தை 21 , ஞாயிற்றுக்கிழமை
நவமி பிற்பகல் 1.35 மணிவரை

அனுசம் பின்னிரவு 4.09 ணிவரை
சுபநேரம் 9.35-11.05 மணிவரை
இராகுகாலம்-5.05-6.35 மணிவரை

சந்திராஷ்டமம்
அச்சுவினி

வளவன்




மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், தேகாரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வழிபட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், நண்பர்களால் நம்பிக்கைகள் நடைபெறலாம்.




தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் முன்னேற்றம் உண்டு, வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள்.




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.




அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் தீரும், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.




வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.




குடும்பத்தினர் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், விரும்பிய காரியம் விரும்பிய படியே கைகூடும்.




திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.




மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.




எதிர்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறலாம்.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், பயணங்களால் ப-லனுண்டு.

நீ விழும் வரை விட்டு வைக்கிற நண்பன் உன் விரோதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் குரல்வளையை நசுக்கவே புதிய சட்டங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(சாவகச்சேரி)

**சுயமாக போராடும் இனத்தின் மீது அடக்குமுறையைப் பிரயோகிக்கவே புதிய சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி குற்றஞ்சாட்டியுள்ளார்.**

கடந்த வியாழக்கிழமை கொடிகாமத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஆகியன தற்போது இலங்கையில் பெரும் பேசு பொருளாக காணப்படுகின்றன.

இந்த சட்டங்கள் தமிழ் மக்களுடைய குரல்வளையை நசுக்க, தமிழ் மக்களுடைய போராட்டத்தை ஒடுக்கவென கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்தச் சட்டங்களின் தாக்கங்களை அறிந்து ஆரம்பத்திலேயே அவற்றுக்கு எதிராக போராடி இருக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் சிறிய அளவில் இதற்கு எதிராக போராட்டம் நடத்தப்பட்டது. எமது போராட்டங்களை வெளி உலகிற்கு கொண்டு செல்லும் ஊடகவியலாளர்களை அடக்குவதற்கே இந்த நிகழ்நிலை காப்புச் சட்டம் பிரதானமாக கொண்டுவரப்பட்டுள்ளது.

எமது போராட்டங்கள் வெளி உலகிற்கு தெரிந்தால் சர்வதேசத்தால் அழுத்தங்கள் வரும் என்ற அடிப்படையில் பிரச்சினைகளை மூடி மறைக்க குறித்த சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

சிங்கள கட்சிகள் யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்கள் மீது அடக்குமுறைகளை மேற்கொள்வதே அவர்களுடைய நோக்கம்.

தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் புதிதாக கொண்டுவரப்பட்ட இரண்டு சட்டங்களுக்கு எதிராகவும் சர்வதேச ரீதியாக எதிர்ப்பு பிரசாரம் செய்து மாற்றம் கொண்டுவர முயற்சிக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். ( நி-30)

# கொள்ளைச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெல்லியடி பகுதியில் நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் நகைகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவத்தில் தேடப்பட்டு வந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

39 மற்றும் 27 வயதான இருவர் கைது செய்யப்பட்டதுடன் நகைகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தொடர் விசாரணைகளுக்கமைய இருவரும் நெல்லியடி பகுதியில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் கடந்த வருடத்தின் முற்பகுதியில் இடம்பெற்ற திருட்டு சம்பவம் தொடர்பாகவே கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (நி-33)

# யாழ்.சிறைச்சாலையில் இருந்து 22 கைதிகள் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சிறைச்சாலையில் இன்று 22 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பின் அடிப்படையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 22 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக யாழ்ப்பாண சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விடுதலை செய்யப்படவுள்ள கைதிகள் சிறுகுற்றங்கள் புரிந்து தண்டப் பணம் செலுத்தாத குற்றச்சாட்டுகளால் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட 22 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக யாழ்ப்பாண சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (நி-30)

# கஞ்சாவுடன் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பொலிஸாரால் கடந்த முதலாம் திகதி கஞ்சா போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கஞ்சாவுடன் கைதான நபர் ஒருவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபடும் கச்சாய் பகுதியைச் சேர்ந்த மேற்படி பெண்ணை கைது செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது குறித்த பெண்ணிடம் இருந்து 650 மில்லி கிராம் கஞ்சா மீட்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-30)

# 23 லட்சம் பெறுமதியான நகை திருட்டு; சந்தேக நபர் கைது - நகைகள் மீட்பு

(யாழ்ப்பாணம)

யாழ்ப்பாணம் நகரில் நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் ஆட்கள் இல்லாத நேரம் 23 லட்சம் பெறுமதியான நகை மற்றும் இரண்டு லட்சம் ரூபா பணம் களவாடப்பட்டமை சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜருளின் வழிகாட்டுதலில் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவின் பதில் பொறுப்பதிகாரி இந்திக்க தலைமையிலான அணியினர் குறித்த திருட்டு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைது செய்துள்ளதோடு அவரிடமிருந்து திருடப்பட்ட 23 லட்சம் ரூபா பெறுமதியான 13 பவுண் நகையினையும் 2 லட்சம் ரூபாய் பணத்தினையும் மீட்டுள்ளனர். யாழைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு குறித்த நபர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (நி-33)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச பண்பாட்டுப் பேரவையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 11.02.2024 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கலைஞர்கள், கலைமன்றங்களின் பிரதி நிதிகள், கலை ஆர்வலர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக் குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (நி)

# 20 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சரசாலை தெற்குப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 20 லீற்றர் கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது கைதான சரசாலையைச் சேர்ந்த 50 வயதான சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-30)

# ‘தென்தீபம்’ இதழுக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவகம் தெற்கு வேலணை பிரதேச கலாசாரப் பேரவையினால் ஆவணப்படுத்தும் வகையிலமைந்து வெளியிடப்படவுள்ள தென்தீபம் - இதழ் 8 இற்கான ஆக்கங்கள் வேலணை பிரதேசத்தைச் சார்ந்த எழுத்தாளர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள், வேலணை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் வேலணை பிரதேசத்திலுள் அரசசேவை அலுவக உத்தி யோகத்தர்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

வேலணை பிரதேசத்தின் கலை, கலாசாரம், வரலாறு, சமூக வாழ்வியல், தொல்லியல் மரபுரிமைகள், கிராம நாமங்கள், நாட்டுப்புறவியல், ஆன்மீகம் போன்ற பண்பாட்டம்சங்களை பிரதிபலிக்கும் வகையிலான ஆய்வுக்கட்டுரைகள், கவிதை, சிறுகதை, ஆவணத் தரவுகள், நேர்காணல்கள், பல்சுவை அம்சங்கள் போன்ற ஆக்கங்களை வழங்க முடியும்.

படைப்பாளிகளின் ஆக்கங்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வகையிலும் பிரதேசத்தின் தரவுகளை ஆவணப்படுத்தி வெளிக்கொணரும் வகையிலும் இவ் இதழானது அமையவுள்ளது.

ஆக்கங்களை வழங்க விரும்புவோர் எதிர்வரும் 31.03.2024 இற்கு முன்னர் வேலணை பிரதேச கலாசார பிரிவில் வழங்குமாறு கேட்டுக் கொள்வதுடன் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், வேலணை அல்லது செயலாளர், வேலணை பிரதேச கலாசார பேரவை, பிரதேச செயலகம், வேலணை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியுமெனவும் கிடைக்கப்பெறும் ஆக்கங்கள் கலாசார பேரவையின் மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்திற்கமைவாக தென்தீபம் - இதழ் 8 இல் உள்ளடக்கப்படும்.

அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்கள் தொடர்பிலான பொறுப்புக்கள் அனைத்தும் படைப்பாளியையே சாரும் என்பதனை உறுதிப்படுத்தி அனுப்புமாறு தீவகம் தெற்கு வேலணை பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான க.சிவகரன் அறிவித்துள்ளார். (நி)

# கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(அக்கராயன்)

ஆதிரை அமைப்பின் முல்லைத்தீவு கிளையினரால் அண்மையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த நான்கு மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை மற்றும் மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. ஏனைய தரம் ஐந்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் மற்றும் மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (நி-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
Viber 076 636 3378
நாதம் 426



# சுதந்திர தினம் யாருக்கு!

**இந்த நாட்டில் அனைத்து இனங்களும் ஒன்றிணைந்து சுதந்திரதினத்தை கொண்டாட வேண்டும் என்றால் சிறுபான்மையினரின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அவர்கள் தமது பூர்வீகத்தில் சிதையாத தமது பண்பாடு-கலாசாரத்துடன் வாழ வேண்டும்.**


(கோப்புப் படம்)

இலங்கையில் சுதந்திரம் மலர்ந்து 76 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆயினும் இலங்கையில் வாழும் ஒட்டு மொத்த மக்களையும் சுதந்திரம் சென்றடைந்ததா எனும் கேள்வி இங்கு எழவே செய்கிறது.

ஏன் இவ்வாறான கேள்வி எழவேண்டும் என்பதிலேயே அதன் முழுத் திறனும் அடங்கியிருக்கிறது.

நாட்டில் புரையோடிக் கிடக்கும் இன-மத முரண்பாட்டின் வெளிப்பாடு இது என ஆய்வாளர்கள் கூறுவர்.

ஆயினும் இன முரண்பாடே இந்த நாட்டின் சீரழிவுக்குக் காரணம். காலணித்துவ ஆட்சியின் பிடியில் இருந்து இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தாலும் அச் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்ட, ஒரு இனத்துக்கானதாய் மாற்றப்பட்டதன் விளைவே இன்றுவரை இனங்களுக்கிடையில் முரண் எழக் காரணமாகி நிற்கிறது.

இதற்கு காலம் காலமாக ஆட்சிக்கு வந்த பெரும்பான்மை ஆட்சியாளர்களே முழுக் காரணமாகின்றார்கள் என்ற உண்மையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சிறுபான்மைத் தமிழினத்தின் உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டதுடன் அவர்களின் பூர்வீகங்களை சுவீகரிக்கும் கபளீகரம் செய்யும் செயற்றிட்டத்தை அரச இயந்திரங்கள் தீவிரமாய் மேற்கொண்டதன் விளைவையே நாம் இன்றுவரை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் இன வாதத்தைத் தூண்டும் செயற்றிட்டத்தை தீவிரமாய் மேற்கொண்ட ஆட்சியாளர் தமிழினம் தொடர்பிலும் அவர்களின் உரிமைக் கோரிக்கைகளையும் தவறான முறையில் எடுத்தியம்பி அவர்களின் மனங்களில் தமிழினத்தின் மீது வெறுப்புணர்வை ஏற்படுத்தினர்.

ஒரு நாட்டில் சுதந்திரம் மலர்ந்து விட்டதாயினும் அந் நாட்டில் வாழும் ஒரு பகுதியினர் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டால் நிச்சயம் அது பாரிய பூகம்பத்தையே தோற்றுவிக்கும்.

அதே நிலையே இலங்கைத்திருநாட்டிலும் நடந்தேறியது.

நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள். நாம் நாட்டில் ஒற்றுமையாய் வாழ்வோம் எனும் உறுதி மொழியுடன் காலணித்துவ ஆட்சியாளர்களிடம் இருந்து நாட்டைப் பெற்றதன் பின்னர் அந் நாட்டின் சிறுபான்மையினரை சீண்டுவதாயும் அவர்களின் வளங்களை சூறையாடுவதாயும் அவர்களின் உரிமைகளை மறுப்பதாயும் ஆட்சியாளர்களின் போக்கு மாறும் போது சிறுபான்மை இனத்தினர் எதைச் செய்து விடமுடியும்.

அதன் வெளிப்பாடே தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு வித்திட்டது.

அரசுக்கு எதிராக போரிடல் புரிவது தவறு எனத் தெரிந்திருந்த போதிலும் அதை விட அரசாங்கத்திடமிருந்து தமிழர் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேறு எந்த உபாயமும்இல்லை என்பதை மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தனர் தமிழ் இளைஞர்கள்.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக போரின் தாண்டவத்தில் சிக்குண்டு சிதைந்து போனது தமிழரின் விலை மதிப்பில்லாத உயிர்களும் உடைமைகளும் என்ற உண்மையை எந்த அரசும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அவர்களின் நோக்கில் "சண்டை எனின் சட்டை கிழியத் தான் செய்யும்" என்ற வடிவேலுவின் வசனத்தையே அறிக்கையிடலாக்கினர். இதைவிட போரில் இறந்து போன அப்பாவிப் பொதுமக்களைப் பயங்கரவாதிகள் என்ற அட்டவணைக்குள் பட்டியலிட்டனர்.

இந்தப் பட்டியலிடல் 2009 இறுதியுத்த இறுதிக் கனம் வரை நீடித்தது என்பதுதான் வேதனையான விடயம்.

இதன் விளைவு பல்லாயிரக்கணக்கான அப்பாவி உயிர்கள் மூச்செறிந்து போயின.

தனது இனத்தின் மறுக்கப்பட்ட சுதந்திரத்தைப் பெற்றுத்தர ஆயுதமேந்தியவர்களுக்கு பயங்கரவாத சாயம் பூசப்பட்டு பயங்கரவாதம் அழிக்கப்படுவதாய் கூறிக் கொண்டு அப்பாவி உயிர்களைப் பலி எடுத்ததை சர்வதேசம் கண் திறந்து மௌனித்திருந்ததை இன்றுவரை ஈழத்தமிழினத்தினால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

தமிழினம் இந்த நாட்டின் குடி மக்கள் அல்லாதவர்கள் எனும் போர்வையில் இன அழிப்பை மேற்கொண்டு விட்டு அதற்கு பதில் கூறாமல் இறந்தவர்கள் பயங்கரவாதி கள் என அனைத்தையும் மூடி மறைக்கும் அரசுகள் எப்படி தமிழினத்துக்கான நீதியை, சுதந்திரத்தைத் தருவாங்கள் என சர்வதேசம் சிந்தித்துப் பார்க்காமல் இருப்பதற்குள் இருக்கும் வஞ்சகத்தை தமிழினம் நெஞ்சில் வைத்து நோகிறது.

இலங்கைத் திருநாட்டில் இயற்றப்படும் சட்டங்கள் எவற்றை எடுத்துக் கொண்டாலும் அதனால் அதிகம் பாதிக்கப்படுவது சிறுபான்மைத் தமிழினமாகவே இருக்கும்.

எனின் சட்டங்கள் சிறுபான்மையினருக்கு எதிராக இயற்றப்படுகிறதா என்ற சிந்தனை எழுவதில் தவறேதும் இல்லையே.

இன்று இலங்கை திருநாட்டின் 76 ஆவது சுதந்திர தினம். ஒரு நாட்டின் சுதந்திர தினத்தை அந் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அனுஷ்டிக்க வேண்டும்.

அவ்வாறு இலங்கை சுதந்திரதினம் நடைபெறுகிறதா என்றால், அதுதான் இல்லை.

இந்த சுதந்திர தினம் அரசாங்கத்திற்கோ, பெரும்பான்மை இனத்தவர்க்கோ சுதந்திர தினமாக இருக்கலாம். அது தமிழினத்துக்கு கரிநாள் என யாழ்.பல்கலை கழக மாணவர் ஒன்றியம் பிரகடனப்படுத்தி பாரிய ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்திருக்கின்றது. இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ் அமைப்புகள் பல ஆதரவைத் தெரிவித்திருக்கின்றன.

இலங்கையில் சுதந்திரம் மலர்ந்து 76 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆயினும் இன்றுவரை சிறுபான்மைத் தமிழினத்துக்கான உரிமைகள் முழுமையாய் கிடைத்ததாய் இல்லை. தமிழர் பூர்வீகங்கள் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது.

இந்நிலை ஆரோக்கியமானதல்ல. இந்த நாட்டில் அனைத்து இனங்களும் ஒன்றிணைந்து சுதந்திரதினத்தை கொண்டாட வேண்டும் என்றால் சிறுபான்மையினரின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அவர்கள் தமது பூர்வீகத்தில், சிதையாத தமது பண்பாடு-கலாசாரத்துடன் வாழ வேண்டும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

## இராமாயணத்தை பிரதமர் மோடிக்கு எடுத்துரைத்த கம்பவாரிதி வாழ்க!

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் மூப்பரைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

அது சரி, எப்பவும் ஆலடிக்கு முதலில வாற மூப்பரை இன்னும் காணவில்லை. என்ன சங்கதி? கங்காணி கார்த்திகேயன் விசாரித்தார்.

**விதானையார்:-** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில சர்வதேச கிறிஸ்தவ மாநாடு நடக்குதல்லோ. அந்த மாநாட்டிற்குப் போயிற்றுத் தான் வருவன் எண்டு மூப்பர் சொன்னவர்.

**வாத்தியார்:-** நல்லது. இனி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில கிறிஸ்தவ மாநாடு நடத்தப்பட்டால் தான் ஒரு சமய மாநாடு எங்கட பல்கலைக்கழகத்தில நடந்தது எண்டு காட்டலாம்.

**பண்டிதர்:-** ஏன்? வாத்தியார் அப்படிச் சொல்லுறியள்.

**வாத்தியார்:-** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில இருந்து மெல்லச் சாகிற துறையாக இந்து நாகரிகத்துறை வந்திட்டுது. எங்கட யாழ்ப்பாண மாணவர்கள் இந்து நாகரிகத்துறையைக் கற்கவும் விரும்புகினம் இல்லை.

அந்தத் துறையில இருக்கிறவர்களும் தங்களுக்குப் பிறகு இந்து நாகரிகத்துறை இருக்கக்கூடாது என்ற உறுதியோட செயற்படுகினம் போல.

**சாத்திரியார்:-** அதெண்டால் உண்மை தான். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர நுழைவாயில் தூணில இருக்கிற நந்திகளைப் பார்க்கிறியள் தானே. மூக்கு உடைஞ்ச இரண்டு நந்தி. ஏதோ புதைகுழியில இருந்து எடுக்கப்பட்ட சேதமடைந்த நந்தி மாதிரியல்லோ அவை இருக்குது.

எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில தமிழ்த்துறை, இந்து நாகரிகத் துறை என்பன இருந்தும் அந்த நுழைவாயிலில இருக்கிற இரண்டு நந்திகளையும் அகற்றி, சிறந்த முறையில வடிவமைக்கப்பட்ட இரண்டு நந்திகளை வையுங்கள் எண்டு சொல்லுறதுக்கு ஒருத்தருக்கும் துணிவு இல்லை.

**சிறாப்பர்:-** நீங்களும் தான் எத்தனையோ தடவை அந்த நந்தியைப் பற்றிக் கதைத்துப் போட்டியள். ஆனால் இன்று வரை அந்த மூக்குடைஞ்ச இரண்டு நந்திகளையும் அகற்றிப் போட்டு, அந்த இடத்தில இரண்டு பெரிய நந்திகளை வைக்கிறதுக்கு முடியல்லத் தானே!

**வாத்தியார்:-** என்னெண்டு முடியும். எங்கட பதவிகளுக்காக நாங்கள் பாத பூசை செய்யிறம், புகழ் பாடுகிறம், ஈச்வரத்தில அர்ச்சனை செய்யிறம். பிறகு உந்த நந்தி விடயத்தில ஆரு கவனம் எடுக்கப் போகினம்.

**விதானையார்:-** சில வேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர நுழை வாயிலில இருக்கிற உடைந்த இரண்டு நந்திகளையும் அகற்றிப் போட்டு, புதிய நந்திகளை வையுங்கள் எண்டு கிறிஸ்தவ மாநாட்டில ஒரு தீர்மானம் கொண்டு வந்தால், அந்தத் தீர்மானம் உடனடியாக அமுலாகும் எண்டு நம்புறன்.

**வாத்தியார்:-** அப்படியொரு தீர்மானத்தை கொண்டு வருமாறு நாங்கள் கேட்கலாம். ஆனால், தான் எழுதின புத்தகத்தில யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின்ர இலட்சினையில இருந்த நந்தியை நீக்கிப்போட்டு இலட்சினை போட்ட பாதரல்லோ மாநாட்டில முக்கிய அதிதியாக வந்திருக்கிறார். அப்ப அவர் அப்படியொரு தீர்மானத்தை ஏற்றுக்கொள்வாரோ.

**விதானையார்:-** வாத்தியார் சொல்லுறதும் சரி தான். மூக்குடைஞ்ச நந்தி முழிவளத்துக்கு இருந்தால், கனபேர் மூக்குடைபட்டுத் தான் போவினம். ஏதோ நடக்கட்டும். ஆனால் நாங்கள் இந்தியப் பாராளுமன்றத்தில நந்தி வீற்றிருக்கும் செங்கோல் வைக்கப்பட்டதை நினைத்து ஆறுதல் அடைவம்.

இவ்வாறு விதானையார் கூறியதும் ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க, கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அதுசரி, அயோத்தி இராமர் கோவில் கட்டுமானத்தில இரும்பு எதுவும் பயன்படுத்தாமல் அந்தக் கட்டுமானம் செய்யப்பட்டிருப்பதாக அறிந்தன். உண்மைதானோ?

**பண்டிதர்:-** அயோத்தி இராமர் கோவில் கட்டு மானத்தில இரும்பு பயன்படுத்தப்படவில்லை என்பதோட, அந்தக் கட்டுமானத்தில ஆயிரம் ஆண்டுகளுக்கு எந்தத் திருத்த வேலையும் செய்ய வேண்டிய தேவை இல்லை எண்டும் சொல்லப்படுகுது.

**வாத்தியார்:-** அயோத்தி இராமர் ஆலயம் அமைக்கப்பட்டதோட, இப்போது காசியில உள்ள ஒரு மசூதி, ஆதிகால சிவன் ஆலயம் இருந்த இடத்தில கட்டப்பட்டிருக்குது எண்டும், அங்கு உள்ள பாதாள அறையில இருக்கக்கூடிய சிவலிங்கத்தை வழிபடுவதற்கு இந்துக்களுக்கு உரிமை உண்டென்றும் இந்திய நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கி இருக்குது.

**சாத்திரியார்:-** அயோத்தி இராமர் ஆலயப் பிராணப் பிரதிஷ்டைக்கு முன்பாக, இந்திய பிரதமர் மோடி 11 நாட்கள் விரதம் இருந்து ஆலய தரிசனம் செய்தவர்.

அவ்வாறு அவர் ஆலய தரிசனம் செய்தபோது ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில இராமாயணம் பற்றி எங்கட கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் பிரதமர் மோடிக்கு எடுத்துக் கூறியிருந்தார்.

உண்மையில இந்தியப் பிரதமர் மோடிக்கு இராமாயணம் பற்றி எடுத்துக் கூறுகின்ற பெருமை எங்கள் கம்பவாரிதி இ.ஜெயராஜ் மூலமாக எங்கட ஈழத் தமிழினத்திற்குக் கிடைத்திருக்குது.



**சிறாப்பர்:-** அகில இலங்கை கம்பன் கழகத்தை ஸ்தாபித்து கம்பனுக்கு விழா எடுத்து இராமபிரானைப் போற்றியதன் பலன்தான்; இந்தியப் பிரதமர் மோடிக்கு இராமாயணத்தை எடுத்து கூறுகின்ற பாக்கியம் கம்பவாரிதிக்குக் கிடைத்திருக்குது.


140 கோடி மக்களின் தலைவனுக்கு இராமாயணத்தை எடுத்துக் கூறுகின்ற திறமையும் ஆற்றலும் எங்கட கம்பவாரிதி இ.ஜெயராஜுக்குத் தான் உண்டு என்பதை நினைக்கும் போது ஈழத் தமிழர்களாகிய எங்களின் தோட்புயம் உயர்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில கம்பவாரிதிக்கு எங்கட பாராட்டையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று கூற, அனைவரும் எழுந்து நின்று கம்பவாரிதிக்கு நன்றி பாராட்ட, அந்நேரம் பார்த்து தானும் பாராட்டுத் தெரிவிப்பது போல, ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, அனைவரும் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**நிகழ்நிலை சட்டமூலம் நிறைவேறிவிட்டது. இலங்கை சுதந்திர தினம் கொண்டாடக் கூடிய நாடா வியாசரே?**

**தமிழரசுக்கட்சி தலைமைப் பதவியில் தோல்வியுற்றதும் சிறீதரன் தலைவரானது தனக்கு மகிழ்ச்சி என்றாரே சுமந்திரன்?**

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**கேசவன் — மந்துவில்**

**தற்கொலையைத் தடுக்க முடியாதா வியாசரே?**

தற்கொலை நோய் ஒரு மனிதனிடம் திடீரென வந்து விடுவதில்லை. அது இந்த சமூகத்தின் எச்சங்களை உண்டு அதில் மீளமுடியாத நிலைக்கு மனிதர்களை கொண்டு வந்து விடுகிறது.

அண்மையில், தான் நினைத்தது போல முடிவெட்ட தந்தை அனுமதிக்கவில்லை என்பதற்காக 15 வயது சிறுவன் தற்கொலை செய்து கொண்டான் என்ற செய்தி என்னை வெகுவாகப் பாதித்தது.

வெட்டினால் வளரக் கூடிய முடிக்காய் உயிர் மாய்க்கப்படுகிறது எனின் மயிரை விட உயிர் சாதாரண விடயம் ஆகி விட்டது என்ற மன ஆதங்கம் என் தூக்கத்தைக் கலைத்துவிட்டது.

**ரிதுஷ் — யாழ்ப்பாணம்**

**ஆசை யாரைத்தான் விட்டு வைத்தது வியாசரே?**

சிறுபிள்ளைக்கு ஐஸ்கிறீம் மீது ஆசை என்பது பரிநாம வளர்ச்சி எடுத்து பொன், பொருள் சேர்க்கும் அவா வந்து விட அதற்காய் லோ லோ என அலைந்து உழைத்து அதையும் அடைந்து விட பதவி ஆசை முளைத்தெழும். அதற்காய் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலையோ அலையலை என்று அலைந்து அதையும் பெற்று அட கறுமம் ஐம்பது ரூபா கொப்பியை வாங்கி ஐம்பதாயிரம் ரூபா செலவில் அதைக் கொடுக்கும் நிகழ்வை நடத்தி, அதை ஊடகங்களில் வெளியிட்டு அதைப்பார்த்து மகிழ்வுறும் மானங் கெட்ட பெரியவர்கள் எம் சமூகத்தில் இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என நினைக்க; வெட்கம், வேதனை, அவமானம்.

**டனுஷாந் — திருநெல்வேலி**

**தமிழரசுக்கட்சி தலைமைப் பதவியில் தோல்வியுற்றதும் சிறீதரன் தலைவரானது தனக்கு மகிழ்ச்சி என்றாரே சுமந்திரன்?**

அதுதான் அவர் ஏற்கனவே கூறி விட்டாரே எமக்கிடையில் இருப்பது ஆரோக்கியமான போட்டி மட்டுமே என. அதைக் கேட்டதற்குப் பின்னும் நீங்கள் ஏன் இப்படிக் கூறுகிறீர்கள்.

ஓரணியில் இருக்க வேண்டிய தமிழரசுக்கட்சி இரு அணியாக நிற்கிறது.

அதை ஓர் அணியாக ஒன்றுபடுத்த நான் பொதுச் செயலாளராக வந்தால் நல்லது எனவும் கூறியிருக்கிறாரே.

அட நீங்கள் நினைப்பது போல எமக்கு எந்த பதவி ஆசையும் இல்லை தம்பியவங்கள்.

**ஸ்ரீஜீவா — வட்டுக்கோட்டை**

**தமிழினத்தின் பிரச்சினையைத் தீர்க்கவென்று புறப்பட்டவர்கள் தம் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் நிற்கின்றனரே?**

என்ன செய்வது.பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடியதாம் என்பது போலவும் பூனை இல்லாத வீட்டில் எலி சன்னதமாடியது என்பது போலவும் நடந்து கொள்ளும் எம்மவர்களின் புத்தியை எப்படி தீட்டிவிட முடியும்.

புத்தி ஒன்றும் கத்தியில்லையே.அது கத்தி போன்று இருந்தால் மரக்கட்டையில் மணல் தூவி இரண்டு பக்கமும் விரட்டுவிரட்டு என உரசி விட கடும் கூர் காட்டும்.

அதுசரி கடும் கூர் மழுமட்டை என்றொரு சொல்லாடலும் உண்டல்லவா!

**மதுவன் — மீசாலை**

**தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை உடன் நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறதே?**

கறிக்குள்ள போட்ட உப்பைத் தேடுற மாதிரி எங்கினை பிழை பிடிக்கலாம் எண்டு தேடித் தேடி களைத்துப் போய் அட இந்தப் பழம் புளிக்கும் என்று வெறுத்து ஒதுக்கி இப்ப மாநாட்டை நடத்த வலியுறுத்துவது; உங்களுக்கு மட்டுமல்ல தமிழர்களுக்கும் ஏன் என்று புரியவில்லையே.

போகப்போகத் தெரியும். இந்தப் பூவின் வாசம் புரியும்.இந்தப் பதிலை எழுதும் போது எனது ரேடியோவில் ஒலித்த பாடல் இது.

**விஜயதரன் — உரும்பிராய்**

**அண்மைக்காலமாக அதிக போதைவஸ்து பாவனையால் பல இளைஞர்களின் உயிர் பறிபோய் விட்டதே?**

உயிர் மாய்க்கும் போதை. இதைத் தெரிந்தும் எம் இனத்து இளைஞர்களுக்கு கொடுத்து அவர்களைச் சீரழிக்கும் செயலை யார், யாரின் பணிப்பில் செய்கிறார்கள் என்பது தமிழினத்துக்கு நன்கு தெரியும்.

ஆனாலும் என்ன செய்ய முடியும். எமக்காக, எமது இனத்தின் விடிவுக்காக எந்த எல்லை வரை செல்லக் கூடிய தலைவனை தமிழினம் இழந்து பல வருடங்கள் கடந்து விட்டது.

இப்போது பச்சோந்தித் தலைவர்களிடம் மாட்டிக்கிடக்கிறோம்.

அவர்கள் தேர்தல் திருவிழாக் காலங்களில் மட்டும் எம்மைத் தேடி வரவல்லவர்கள்.

அதுவே அவர்களின் அதீத அரசியல் ஆட்டம்.

**சுதன் — குப்பிழான்**

**நிகழ்நிலை சட்டமூலம் நிறைவேறிவிட்டது. இலங்கை சுதந்திர தினம் கொண்டாடக் கூடிய நாடா வியாசரே?**

பயங்கரவாதம் இலங்கையில் சூழ்ந்திருக்கிறது என்று மூன்று தசாப்தங்களாகக் கூறினார்கள். தமது இனத்தின் விடிவுக்காக போரிட்டவர்களை அழித்தார்கள்.

பயங்கரவாதத்தை அழித்துவிட்டதாய் மார்தட்டினார்கள். தமது சொந்த நாட்டு மக்களையே கொன்று குவித்து அந்தக் குவியலில் ஏறி நின்று வெற்றி முழக்கமிட்டார்கள்.

மிஞ்சியவர்களை முட்கம்பி வேலிக்குள் அடைத்தார்கள். எல்லாம் முடிந்துவிட்டது.இனிச் சுதந்திரம் என்றார்கள்.

இன்றுவரை சுதந்திரம் என்ற பதத்திற்கு பொருள் தெரியாமல் தவிக்கிறது சிதிலமடைந்த சிறுபான்மை இனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

**படம் : படித்தால் மட்டும் போதுமா**
**இசை : விஸ்வநாதன் ராமமூர்த்தி**
**பாடியவர் : பி.பி.ஸ்ரீனிவாஸ், எ.எல் ராகவன், ஜி.கே வெங்கடேஷ்**



கோமாளி கோமாளி கோமாளி ....

காலம் செய்த கோமாளி தனத்தில்
உலகம் பொறந்தது ஐயா உலகம் செய்த
கோமாளி தனத்தில் உள்ளம் பிறந்தது

காலம் செய்த கோமாளி தனத்தில்
உலகம் பொறந்தது ஐயா உலகம்....

உள்ளம் செய்த கோமாளி தனத்தில் காதல்
பொறந்தது உள்ளம் செய்த
கோமாளி தனத்தில் காதல் பொறந்தது

காதல் செய்த கோமாளி தனத்தில்
ஜோடி சேர்ந்தது
ஐயா ஜோடி சேர்ந்தது

காலம் செய்த கோமாளி தனத்தில்
உலகம் பொறந்தது ஐயா உலகம் செய்த
கோமாளி தனத்தில் உள்ளம் பிறந்தது

அழுகிற கூட்டம் வாழ்கிற இடத்தில்
சிரிப்பவன் கோமாளி
அறிவற்ற கூட்டம் அருகில் இருந்தால்
அறிஞனும் கோமாளி

படித்ததை எல்லாம் பயன் படுத்தாதவன்
முதல் தர கோமாளி ரொம்ப படித்தவன்
போல நடிப்பவன் உலகில் எந்நாளும் கோமாளி

ஓஹோ ஓஓஓஓஹோ...

காலம் செய்த கோமாளி தனத்தில்...

கோமாளி கோமாளி கோமாளி...

காசுக்கும் பணத்துக்கும்
ஆசை இல்லாமல் வாழ்பவன் கோமாளி
வருங்காலத்தை கையில் பிடித்து
கொள்ளாமல் அலைபவன் கோமாளி

ஆசை இல்லாமல் திருமணம் செய்து
துடிப்பவன் கோமாளி தினம் அடுக்கடுக்காக
பிள்ளைகள் பெறுபவன் எந்நாளும் கோமாளி

ஓஹோ ஓஓஓஓஹோ...

காலம் செய்த கோமாளி தனத்தில்
உலகம் பொறந்தது ஐயா உலகம் செய்த
கோமாளி தனத்தில் உள்ளம் பிறந்தது

கோமாளி கோமாளி கோமாளி ...

# களத்தில் நடிகர் விஜய்! அரசியலில் காத்திருக்கும் சவால்கள்

நடிகர் விஜய் கடந்த சில வருடங்களாகவே அரசியல் கட்சி தொடங்குவார் என்று அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்பட்டு வந்தது. திரைப்படங்களில் நடிப்பது ஒருபக்கம் இருந்தாலும் புதிய கட்சியைத் தொடங்குவதற்கான பணிகளையும் அவர் ஒருபக்கத்தில் பார்த்துக் கொண்டேதான் இருந்தார். நடந்து முடிந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற விஜய் மக்கள் இயக்கம் நிர்வாகிகளைச் சந்தித்த நிகழ்வும் நடந்தது. அதிலும் கடந்த சில மாதங்களாக அவர் அரசியல் தொடர்பான பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்ததைக் காணமுடிந்தது.

தொடர்ச்சியாக விஜய் மக்கள் இயக்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகளுடன் பல்வேறு ஆலோசனைக் கூட்டங்கள் தொடர்ந்து நடத்தி வந்தார். நிர்வாகிகள் சந்திப்பு தாண்டி, நெல் லையில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விஜய் மக்கள் இயக்கம் சார்பில் நிவா ரண பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சியிலும் நடி கர் விஜய் நேரடியாகக் கலந்துகொண்டு மக்க ளுக்கு நிவாரண பொருட்களை வழங்கினார்.

பாராளுமன்றத் தேர்தல் நெருங்கும் நிலையில் நடிகர் விஜய் புதிதாக "தமிழக வெற்றி கழகம்" என்ற தனது கட்சியைத் தொடங்கியிருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறார்.

விஜய் தனது கட்சியை அதிகாரபூர்வமாகப் பதிவு செய்தும் முடித்திருக்கிறார். இந்த சூழலில் நடிகர் விஜய் புதிதாகக் கட்சி தொடங்கியதை அவரின் ரசிகர்கள் கொண்டாடி வருவதை காண முடிகிறது. அரசியலுக்கு நுழையும் நடிகர் விஜய், ஒப்புக்கொண்டிருக்கும் படங்களை முடித்த பின்னர் முழுநேர அரசியலில் ஈடுபடுவார் எனத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் தான் போட்டியிடவில்லை என்றும் தனது ஆதரவு எந்த கட்சிக்கும் இல்லை என்பதையும் அழுத்தமாகத் தெரிவித்திருக்கிறார். இதன் மூலம் வரும் தேர்தலில் தமிழக வெற்றி கழகம் போட்டியிடப் போவதில்லை. அந்த கட்சியின் இலக்கு வரும் 2026ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் என்பது தெளிவாகிறது.

புதிய கட்சி தொடங்கியிருக்கும் விஜய்க்கு அரசியலில் காத்திருக்கும் சவால்கள் என்னென்ன. என்பது குறித்து அரசியல் ஆலோசகர்கள் சிலரிடம் பேசினோம். "இந்திய அரசியலில் தமிழக அரசியல் முற்றிலும் வேறு ஒரு கோணம்உடையது. சினிமாவிலிருந்து வந்தவர்கள் அரசியலில் இடம்பிடித்துவிடலாம் என்பது எம்.ஜி.ஆர் தொடங்கி விஜயகாந்த் வரை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அதேநேரம் மாபெரும் நடிகர் என பெயர் பெற்ற சிவாஜியால் அரசியலில் நிலைத்து நிற்க முடியவில்லை. அதனால், திரைத்துறையில் இருந்து வரும் அனைவருமே வெற்றி பெற்றுவிடுவார்கள் என்று சொல்லிவிட முடியாது.

ரசிகர்கள் மத்தியில் விஜய்க்கு பெரும் வரவேற்பு இருப்பது உண்மை தான். ஆனால், தேர்தல் களத்தில் அந்த ஆதரவு வாக்காக மாறும் என்பதில் எந்த நிச்சயமும் இல்லை. திராவிட கட்சிகள் ஆழமாக வேரூன்றி நிற்கும் தமிழகத்தில் இன்னொரு கட்சி விதை தற்போது தான் வைக்கப்பட்டிருக்கின்றது.

அது முளைத்து வரவே விஜய் கடினமான உழைப்பைப் போடவேண்டியது இருக்கும். கட்சி விதிமுறைகளை ஏற்படுத்த வேண்டும். கட்சிக்கு மாவட்ட வாரியாக ரசிகர் மன்றம் இருப்பது அவருக்கு ஒரு பக்கபலம். அதனை கட்சியாக மாற்றி, ரசிகர் மன்ற நிர்வாகிகளை கட்சி நிர்வாகிகளாக மாற்றி அவர்கள் கட்சி பணி செய்து மக்கள் மத்தியில் விஜய்யின் கட்சியை எடுத்துச் செல்லும் அளவுக்கு உழைக்க வேண்டும்.

இவை அனைத்துக்கும் பெரும் பொருட் செலவும் இருக்கிறது. இத்தனை ஆண்டுக்காலம் தான் சம்பாதித்த அனைத்தையும் அரசியலில் செலவு செய்யவும் அவர் தயாராக இருக்க வேண்டும். மாவட்டச் செயலாளர்கள் தொடங்கி பூத் கமிட்டி அமைப்பது வரை ஒரு அரசியல் கட்சியில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் பாஜகவால் கூட தமிழகத்தில் மொத்தம் உள்ள 75 ஆயிரம் பூத் கமிட்டியில் 12 ஆயிரம் பூத்கமிட்டியைத்தான் இதுவரை முழுமையாக போட முடிந்திருக்கிறது. அதிகாரத்தில் இருக்கும் ஒரு கட்சியால் கூட அவ்வளவு எளிதில் கட்சி கட்டமைப்பை இங்கு வலுப்படுத்திவிட முடியாது. அந்தளவுக்குத் திராவிட கட்சிகளின் வளர்ச்சி தமிழக மக்களிடம் ஆழமாக உள்ளது.

எல்லாவற்றையும் தாண்டி ஒரு அரசியல் கட்சி நிலைத்து நிற்க அந்த கட்சி எடுத்துக்கொள்ளக் கூடிய கருத்தும் கொள்கையும் மிக முக்கியம். திமுகவுக்கு சமத்துவம், சமூக நீதி என்ற கொள்கைகள் தான் அன்று முதல் இன்றுவரை கைகொடுக்கிறது. எதிர்க்கட்சியாக இருந்த தேமுதிக தொடங்கி இங்கு பல கட்சிகள் காலப்போக்கில் கரைந்து போனதற்குச் சரியான கொள்கைகள் எதுவும் இல்லை என்பதே முக்கிய காரணம். இன்று வரை சீமானின் நாம் தமிழர் கட்சி நிலைத்து நிர்வகிக்கும் அவர் கையிலெடுத்த தமிழ்த் தேசியம் என்று ஒரு கொள்கை முக்கிய காரணம். ஏதாவது ஒரு பிரச்சினையைச் சொல்லி அரசியலுக்கு வருகிறோம். அந்த பிரச்சினை முடிந்து விட்டால் அடுத்து என்ன... என்ற கேள்வி வந்து விடும். காலப்போக்கில் மக்களும் அந்த கட்சியை மறந்துவிடுவார்கள். அதனால், ஒரு கட்சியின் கொள்கை மட்டுமே அந்த கட்சியை உயிர்ப்புடன் வைத்திருக்கும். அதனை யோசித்து முடிவு செய்யவேண்டிய கட்டாயத்தில் விஜய் இருக்கிறார்" என்றார்கள் விரிவாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்கு நிதிப் பயிற்சி முக்கியம்!



இன்றைய பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பல விடயங்களைச் சொல்லித் தர விரும்புகிறார்கள். நீச்சல் பயிற்சி தொடங்கி கராத்தே பயிற்சி வரை பலவிதமான பயிற்சிகளை எல்லாம் அளிப்பது எந்தளவுக்கு முக்கியமோ அந்தளவுக்கு முக்கியம் பிள்ளைகளுக்கு பணத்தைப் பற்றியும் அதை எப்படி நிர்வாகம் செய்வது என்பதைப் பற்றியும் சொல்லிக் கொடுப்பதாகும். உங்கள் பிள்ளைகளுக்குப் பண நிர்வாகம் பற்றி சரியாகச் சொல்லித் தந்துவிட்டால் போதும் அவர்கள் நிதிச் சுதந்திரத்தை அடைவது நிச்சயம்.

**1. பணம் சம்பாதிக்க பிள்ளைகளை ஊக்குவிக்கவும்...**

உங்கள் பிள்ளைகளை சிறு சிறு வேலைகளைச் செய்ய சொல்லுங்கள் மற்றும் அனுமதியுங்கள். அதற்காக சிறிய தொகையை அவர்களுக்குக் கொடுங்கள். உதாரணமாக, பிள்ளைகளை வீட்டைச் சுத்தப்படுத்துதல், வாகனங்களைக் கழுவுதல், செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுதல் உள்ளிட்ட வேலைகளை செய்யச் சொல்லி அதற்கு சிறிய தொகையை வெகுமதியாகக் கொடுக்கலாம்.

அப்போது அவர்களுக்கு வேலை செய்தால் பணம் கிடைக்கும் என்கிற கருத்து புரியவரும். இது பிள்ளைகள் பணம் சம்பாதிப்பதற்கான கருத்தை அவர்களுக்குக் கற்பிக்க ஒரு சிறந்த வழியாகும். இது பிற்காலத்தில் அவர்கள் தொழில்முனைவோர்களாக மாற ஒரு நல்ல விதையாக இருக்கும்.

**2. சேமிப்பு, முதலீடு தொடங்குங்கள்...**

பெரும்பாலும், பிள்ளைகள் பிறந்த நாள் மற்றும் பண்டிகைகளுக்குப் பணத்தைப் பரிசாகப் பெறுகிறார்கள். இப்படி பிள்ளைகளுக்கு பெற்றோர் மற்றும் உறவினர்கள் பணத்தைப் பரிசளிப்பது என்பது சேமிப்பின் அடிப்படை மற்றும் முக்கியத்துவத்தைப் பிள்ளைகளுக்கு வலியுறுத்துவதாகும்.

இப்படி அன்பளிப்பாக, பரிசாகக் கிடைத்த பணம் மற்றும் பிள்ளைகள் சிறிய வேலை செய்து மூலம் கிடைத்த பணம், பயன்படுத்திய பொருட்களை விற்றது மூலம் கிடைத்த பணம் ஆகியவற்றை வங்கிகளின் சேமிப்புக் கணக்கில் சேமித்து வரலாம்.

உதாரணமாக, 100 ரூபாவை ஆண்டுக்கு 10% வட்டி தருகிற ஒரு முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்தால், அந்தத் தொகைக்கு ஓராண்டு முடிவில் ரூ.10 வட்டி கிடைக்கும் எனச் சொல்லிக் கொடுங்கள். அடுத்த ஆண்டில் வட்டி 10 ரூபாவையும் சேர்த்து ரூ.110ஆக முதலீடு செய்யும்போது இரண்டாம் ஆண்டு முடிவில் இந்த ரூ.110 இற்கு 11 ரூபாய் வட்டி கிடைக்கும். இந்த வட்டியையும் சேர்த்தால் ரூ.100 முதலீடு என்பது ரூ.121ஆக பெருகி இருக்கும்.

இப்படி சேரும் மற்றும் பெருகும் பணத்தைப் பிள்ளைகளுக்குத் தேவையான சைக்கிள், கம்யூட்டர், லப்டாப், ஸ்மார்ட் போன் போன்ற சற்று அதிக விலை கொண்ட பொருட்களை வாங்கும் போது பயன்படுத்திக் கொள்ளலாம். அப்படிச் செய்யும் போது பணத்தைச் சேமித்து தேவையான பொருட்களை வாங்க வேண்டும் என்கிற எண்ணம் பிள்ளைகளின் மனதில் ஆழப்பதியும்.

**3. ஸ்மாட்டாகச் செலவு செய்ய கற்றுக் கொடுங்கள்...**

பணத்தை எப்படி சிக்கனமாக, ஸ்மாட்டாகச் செலவு செய்வது என்பதை பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுங்கள். உதாரணமாக, பிள்ளைகளுக்கு வீடியோ கேம் வாங்கிக் கொடுக்கப் போகிறீர்கள் எனில், விடுமுறைக் காலம் ஆரம்பிக்கும்முன் வாங்கினால் அவற்றின் தேவை குறைவாக இருக்கும் நிலையில், விலை குறைவாக இருப்பதையும் அதிக பணம் மிச்சம் ஆவதையும் உணர்த்துங்கள். இதேபோல, விடுமுறைக் காலம் முடிந்த பிறகும் அவற்றின் விலை குறைவதையும் சுட்டிக்காட்டுங்கள்.

ஒரு பொருளுக்கு மிக அதிக தேவை இருக்கும் காலத்தில் நாம் அதை வாங்குவதைவிட, தேவை குறைவாக உள்ள காலத்தில் வாங்குவது லாபமாக இருக்கும் என்பதை பிள்ளைகளுக்கு விளக்கிச் சொல்லுங்கள்.

அதேபோல காய்கறிகள், பழங்களை அவை அதிகம் விளையும் சீஸனில் அவற்றின் விலை மலிவாக இருக்கும் போது அதிகமாக வாங்கிப் பயன்படுத்தப் பழக்குங்கள். சீஸன் இல்லாத மற்றும் விலை அதிகமாக உள்ள காலத்தில் அந்தப் பொருட்களைக் குறைவாக வாங்கிப் பயன்படுத்தவும் பழக்குங்கள்.

மேலும், குடும்ப பட்ஜெட் போடும்போது பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள். குடும்பத்தினர் செய்யும் செலவுகள் அனைத்தையும் குறித்து வைக்கச் சொல்லுங்கள். இவற்றின் அடிப்படையில் தேவையில்லாத செலவுகளைக் கண்டறிந்து அவற்றைக் குறைக்க அல்லது தவிர்க்க பிள்ளைகளைப் பழக்குங்கள்.

**4. கடனையும் கற்றுக்கொடுங்கள்...**

நல்ல தேவைக்குக் கடன் வாங்குவதில் தவறு எதுவும் இல்லை என்பதை பிள்ளைகளுக்கு விளக்கிச் சொல்லுங்கள். கல்வி கற்க மற்றும் வணிகம் போன்ற ஆக்கபூர்வமான நோக்கத்துக்காக மட்டுமே கடன்கள் வாங்க வேண்டும் என எடுத்துச் சொல்லுங்கள்.

இன்றைய இளைஞர்களில் பலர் தேவை இல்லாமல் கண்டபடி கடன் வாங்கிவிட்டு, அதை அடைக்கப் போராடி வருவதைப் பார்க்க முடிகிறது. எனவே, அதிக வட்டியிலான மற்றும் தேய்மான சொத்துகளை வாங்குவதற்காகப் பெறும் கடன்களைத் தவிர்க்கப் பழக்குங்கள்.

உங்கள் பிள்ளைகளுக்கு இந்த நான்கு பணப்பழக்கங்களைக் கட்டாயம் சொல்லிக் கொடுத்து, அவர்களை பண விடயத்தில் கில்லாடி ஆக்குங்கள். எதிர்காலத்தில் அவர்கள் பணக்காரர்களாக வாழ்வார்கள்.

# மன்னிப்பு கேட்ட மார்க்



வாட்ஸ் அப், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், டுவிட்டர் என்று இன்றைய காலகட்டத்தில் சமூக வலைத்தளங்களின் ஆதிக்கம் நிறைந்திருக்கிறது.

பெரும்பாலானோர் இந்த சமூக வலைத்தளங்களுக்காகவே பல மணி நேரம் செலவழிப்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். குறிப்பாக குழந்தைகளும் இதற்கு அடிமையாகி விடுகின்றனர். இதனால் பல்வேறு விதமான பிரச்சினைகள் எழுகின்றன. இந்நிலையில், அமெரிக்க செனட் சபையின் நீதித்துறை குழு முன்பு ஆஜரான பேஸ்புக் தளத்தின் நிறுவனர் மார்க் சக்கர்பெர்க் சமூக வலைத்தளங்கள் குறித்த கேள்விக்கு பதிலளித்து விட்டு மன்னிப்பையும் கோரியிருக்கிறார்.

மார்க் சக்கர்பெர்க் செனட் சபையில் ஏராளமான பெற்றோர்கள் ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்றவற்றால் தங்களது குழந்தைகள் பாலியல் தொந்தரவிற்கு ஆளாகி தற்கொலை செய்து கொள்வதாக கண்ணீர் வடித்திருந்தனர். மேலும், தங்களின் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய என்ன செய்திருக்கிறீர்கள் என கேள்வியும் எழுப்பினர்.

இந்நிலையில் மெட்டா நிறுவனத்தின் தலைவரான மார்க் சக்கர்பெர்க் எழுந்து நின்று பெற்றோர்களிடம் மன்னிப்பு கேட்டிருக்கிறார். இதுகுறித்து பேசிய அவர், "நீங்கள் அனைவரும் அனுபவித்த அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் நான் மனம் வருந்தி மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்.

இனி இதுபோன்ற விடயங்களை யாரும் கடந்து செல்லக்கூடாது. குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான தொழில்துறை அளவிலான முயற்சிகளில் மெட்டா நிறுவனம் ஈடுபட்டு வருகிறது" என்று தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## சிறுவர் துஷ்பிரயோகம்

சிறுவர்கள் நாட்டின் வருங்கால தலைவர்கள் அல்லவா
சிறுவரைப் பாதுகாக்கும் பொறுப்பு சமூகத்திடம் உண்டல்லவா
மானிடத்தின் மகத்தான பிறப்பல்லவா-இதனை
உணர்ந்து செயற்படின் எதிர்காலம் மகிழ்ச்சியாகுமே

உலகின் போர் மோகங்கள் சிறுவரை பாதிக்கின்றதே
நிறுவனங்கள் சிந்தித்து செயற்படணுமே-சிறுவர்
மீதான துஷ்பிரயோகம் அனுமதிக்க முடியாதல்லவா
பெற்றோருக்கு பாரிய பொறுப்பு உண்டல்லவா

சிறுவர் கல்வி சிலையில் எழுத்தல்லவா
சிதைக்க நினைப்பவர்கள் மனிதனாகுமா
காலத்தின் கல்வி சிறப்பாக அமையுமே
சிந்திப்போம் சிறுவரைக் காப்போம்

எஸ்.பி.தனா,
தெல்லிப்பழை.

## பதவி வெற்றிடம்

நடுச்சாம கண் விழிப்பில் புருவம் விறைத்து விடும்
நாட்காட்டி சுவர் மேயும் நாள் கணக்கு எண்ணிவிடும்
வட்டிப் பணக்காரன் வாசலிலே நிற்கையிலே
வாய்மூடி வார்த்தை வரவகை
பலவாய் எண்ணத் தோணும் கோதாரி வெளிநாடு
கொண்டை கட்டி ஆடுதிங்க சேதாரம் செய்கூலி
இல்லாத தேசம் விட்டு பாதாள அகழிக்குள்
பாய்ந்து விடத் துடிக்குதுகள் பொன் பொருளால்
வாழ்ந்தவரும் அன்றாடக் காச்சிகளும்
தெருத்தெருவாய் அலையுதுகள்
திணறி நாள் கழிக்குதுகள் படித்ததுவும்
பாமரரும் பல வகைகள் அலையுதுகள்
வெளிநாடு போயி வெள்ளரசு பணமரமேறி
பறித்து வர எண்ணுதுகள்
உள்ளூரு உழா மாடு வெளியூரு போகுதுகள்
இந்நாட்டுவேலைக்கு இனி வெளிநாட்டு
ஆள் வேணும் விண்ணப்பம்
தொங்கும் நாள் வெகுவிரைவில்

பசுவூர் வேலாங்காட்டான்
சி.சிறி.

## வயதும் வழிவிடுமுயர




வயோதிபமென்றால்
ஒதுங்கியிருந்து வழிவிடவே
முறையெனும் சமூகத்திற்கு
சம்மட்டியடி போட்டு
முதுமையும் சாதிக்குமென
அகிலத்தின் முற்றத்தில்
முரசறைந்து சாதித்த
அகிலநாயகி அம்மா
உன் வீராப்பை கண்டு
மெய்சிலிர்க்கின்றது
உறவுகள் புறக்கணித்து
உதவு தொகை கலைந்து
வாழ்வை வெறுத்திருக்கும்
முதிர் பெற்றோருக்கு
முன்னுதாரணம் நீ
அரிதார அலங்காரமில்லா
உன் செயல் போற்றுதற்குரியது

சி.இ.அன்புதுரை,

## மௌனத்தின் தேடல்-701



### மென்மையும் மேன்மையும்



சின்னஞ்சிறு பிராயத்திலிருந்து
விருத்தெரியும் வயது வரை
புனிதமாய் பாதுகாக்கும் பொம்மைகள்
விளையாட்டுப் பொருள் மட்டுமா?
மனிதநேயத்தை வளர்ப்பதற்கும்
கணிசமான பங்கை ஆற்றும்
அன்பு அருவியாகிப் பெருகும் போது
ஒன்றும் ஒன்றும் இரண்டென்றாலும்
இன்று நீயும் நானுமொன்று
என்பது என்றும் நிலைக்கும் உண்மை

க.நாகராசா.
நுணாவில்.

### சின்னப்பொம்மை

கள்ளம் கபடமற்ற குழந்தை உள்ளம்
கவலையற்று விளையாடி மகிழ்ந்திட
பொம்மையும் உன்னிடம்
பொம்மையுடன் நீயும் பொழுதைப் போக்குவாய்
என்று எண்ணியே
பெற்றோர் உனக்கு விளையாடத் தந்தனரோ
கட்டியணைத்து அதன் மேல் படுத்திருந்து
காரணம் புரியாமல் திகைக்கின்றாயே
வேலை நிமித்தம் அவர்கள் வெளியே செல்வதற்காய்
வாங்கியே தந்தனரே கரடி பொம்மையை
சின்னப் பொம்மை நீயும்
சிரித்துப்பேசி விளையாடி மகிழ்ந்திடுவாய்

ஆ.செல்வி. திருநாவலூர்.

### இன்னும் எத்தனை

பஞ்சு பொம்மை
கட்டியணைப்பில்
தாய் மடி
சுகம் காணும்
பிஞ்சு மனமே
அந்நியரின் ஆக்கிரமிப்பில்
உன் அன்னையவள்
அழிக்கப்பட்டதை
உன் கண்வழியே
காணுகிறோம்
செல்லக்கிளியே

அன்பன்.

### வாடகைத்தாய் பெற்ற பிள்ளை

முன்வீட்டு அம்பி விளையாட
அவனுக்கு ஒரு தம்பி உண்டு
அயல்வீட்டுக் கயல் விளையாட
அவளுக்கு ஒரு தங்கை உண்டு
நான் அணைத்து விளையாட
இந்தக் கரடி பொம்மைஉண்டு
என்னுடன் சேர்ந்து விளையாட
தம்பி தங்கை வரப்போவதில்லை
நான் வாடகைத் தாய் பெற்ற பிள்ளை

பி.யதுர்சனி,
புகாக்குளைல் இந்துக் கல்லூரி.

### கனவோடு...

அன்பிற்கோர் அன்னையவள்
ஆராரோப் பாடியவள்
அந்நிய தேசமதில்
தேடலுக்காய்....
அவள் அன்பாய் அளித்த
பேசா பொம்மையின்
அரவணைப்பில்
பெருமூச்சுக் கனவோடு

தமிழினியவள், பரந்தாமன்.

### சத்தம் போடாதீர்கள்

யாரும் சத்தம் போடாதீர்கள்
விளக்கை அணையுங்கள்
என் கரடிப் பாப்பாவை
தூங்க வைக்கப் போகின்றேன்.

பி.மதுஷ்சனி, தையிட்டி.

### பொம்மை

தந்தையோ உழைப்பதற்கு
வெளிநாடு சென்று விட
தாயோ தொலைக்காட்சித்
தொடரில் மூழ்கியிருக்க
சிறுமியோ பணிப்பெண்ணின்
பராமரிப்பில்
சொகுசு மெத்தை தனில்
பெற்றோர் பாசத்திற்கு
ஏங்கியவளாய் பொம்மையின்
அரவணைப்பில் பொம்மையோடு
சிறு பொம்மையாய்

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்- 702



வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம், இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். / எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா



காலத்தின் பதிவு 95

"தலைவர் என்ற சொல் மட்டும் பொருந்தும் போல இருக்கின்றது."

"உம். பொருந்தும்"

"எதற்குத் தலைவர் நீங்கள்?"

"நாடகத்துக்கு."

"நாடகமா?" சரேலென நின்று திரும்பி நோக்கினாள் மஞ்சளழகி.

"ஆம். நாடகம்தான். நில்லாதே, வா" என்று அவளை இழுத்துக் கொண்டு நடந்தான் இளையபல்லவன்.

"என்ன நாடகம்?" என்று கேட்டாள் மஞ்சளழகி. கால்கள் பின்ன, தட்டுத் தடுமாறி நடந்து கொண்டே.

"கடற்கரை நாடகம். அதில் நான் தலைவன். நீ தலைவி. அத்தகைய நாடகப் பாத்திரங்கள் நாம். நடத்திக் கொடுத்தவர் உன் தந்தை, ரசிகர்கள் அதோ" என்று கையால் தூரத்தே நின்ற கொள்ளையரைச் சுட்டிக் காட்டிய அவன் சற்றுப் பெரிதாகவே நகைத்து அவள் கையை விட்டுத் தன் கையால் அவள் இடையை வளைத்துக் கொண்டான்.

அவன் போக்கு அவளுக்கு மெள்ள மெள்ளப் புரிந்ததால் அவள் மீண்டும் வியப்புக்கும் கவலைக்கும் உள்ளானாள். கடற்கரை நாடகத்தைத் தன் தந்தை மட்டும் நடத்தவில்லையென்றும் இளையபல்லவனும் ஏதோ ஒரு பதில் நாடகத்தைத் துவங்கியிருக்கிறானென்பதையும் அவள் உணர்ந்து கொண்டாள்.

அந்த நாடகத்தை முன்னிட்டே கையைப் பிடித்திருந்த கை இடையில் தவழ்ந்து விட்டதென்பதையும் புரிந்துகொண்டாள் மஞ்சளழகி. தந்தை வகுத்த படுகுழியில் விழுவதற்கோ அல்லது அதிலிருந்து தப்புவதற்கோ அவன் பதில் திட்டமொன்றை உள்ளூர சிருஷ்டித்து விட்டானென்பதும் அவனுடைய உறுதியான நடையிலிருந்தும் கேலிப் பேச்சிலிருந்தும் அவளுக்குத் தெள்ளெனத் தெரிந்தது.

ஆகவே அடுத்தபடி என்ன செய்யப் போகிறானென்பதை அறியாமலே சில விநாடிகள் மௌனமாக நடந்த அவள் மறுபடியும், "என் பேச்சைக் கேளுங்கள். இந்த அக்ஷய முனையிலிருந்து சென்று விடுங்கள்," என்று சொன்னாள் குரலில் கவலை பாய.

"ஏன்? என்னைப் பிடிக்கவில்லையா உனக்கு?" என்று சொன்னான் இளையபல்லவன்.

"என்னைக் கேட்க வேண்டாம் அதற்கு," என்றாள் மஞ்சளழகி மனம் கரைய, உணர்ச்சிகள் பொங்கி வழிய.

"பின் யாரைக் கேட்பது?"

"உங்கள் மனதைக் கேளுங்கள்."

இதைக் கேட்டதும் இளையபல்லவன் முகத்தில் பரவிக் கிடந்த கேலி

## வினை விதைத்தலும் வினை அறுத்தலும்

நகை மறைந்து கவலை அதிலிருந்த இடத்தை ஆட்கொண்டது. அவன் மனமென்ன, உணர்ச்சிகள் அனைத்துமே அவள் சொற்களுக்குப் பதில் கூறின.

ஒரேநாளில் வாழ்வு முழுவதையுமே தன் பாதங்களில் அர்ப்பணித்துவிட்ட மஞ்சளழகியின் இதய தாகத்தையும் தியாக வேகத்தையும் பற்றிய உண்மைகளை உணர்ச்சிகள் அவன் சிந்தையில் வாரித் தெளித்தன. அவற்றின் வேகத்துக்கும் வேத்தின் விளைவாக மின்னல் போல் சித்தத்தில் வீசிய கேள்விகளுக்கும் செவி சாய்த்த இளையபல்லவன் சிறிது ஆயாசப் பெருமூச்சு விட்டான். 'இந்த அழகி செய்த இத்தனை தியாகத்துக்குப் பிறகும் அவளை என்ன கேள்வி கேட்கிறாய்?' என்று அவன் மனம்கூட அவனைச் சுரீரெனச் சுட்டது.

அதன் விளைவாக அவன் குரலின் தொனியை மாற்றிக் கொண்டு சொன்னான் "மஞ்சளழகி! அக்ஷயமுனையையும் என்னையும் விட்டுப் போகச் சொல்லும் ஒரு யோசனையை மட்டும் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். வேறு எதை வேண்டுமானாலும் சொல் கேட்கிறேன். நம்பிய பெண்ணைக் கைவிட்டுச் சென்றான் அந்தப் பாதகன் என்று அதோ உள்ள அந்தக் கொள்ளையர் கூற நான் விடமாட்டேன். நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்."

"என்ன முடிவு?" அச்சத்துடன் வினவினாள் மஞ்சளழகி.

(தொடரும்...)

---

## நான் வைரமுத்து பேசுகிறேன்... 41

# மாறும் யுகங்கள் மாறுகின்றன



புதுப்பித்தல் ஒன்று தான் உயிரின் அடையாளம். புதுப்பித்தல் ஒன்றுதான் இயங்குதலின் சமிக்ஞை.

புதுப்பித்துக் கொள்ள மறுக்கிற அல்லது புதுப்பித்துக் கொள்ளத் தெரியாத யாரையும் அல்லது எதையும் திரும்பிப் பார்க்காமல் ஓடி விடுவதென்றே காலம் யுகம் யுகமாய்த் தீர்மானித்திருக்கிறது.

ஓர் இலையுதிர்காலத்திற்குப் பிறகு தன்னைப் புதுப்பித்துக் கொள்ளத் தெரியாத மரத்தை வனம் தன் எண்ணிக்கையில் வரவு வைத்துக்கொள்வதில்லை.

ஊற்று நீராலும் ஆற்று நீராலும் மழை நீராலும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளாத நதியை மனிதன் பெயர்மாற்றி விடுகிறான். 'பிளாட்' போட்டு விற்றுவிடுகிறான்.

கூடு போன்ற பழைய வடிவத்தைப் புதுப்பித்துக் கொள்ளத் தெரியாததால்தான் யுகம் யுகமாய்ப் பறவைகள் ஒரே வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் புதுப்பிக்கத் தெரிந்த மனிதன் பறவைகளுக்குக் கூண்டு தயாரித்து விட்டான்.

புதுப்பித்தல் என்பது காலத்தின் கடப்பாடு. இது ஒரு தனிமனிதனுக்கு மட்டுமன்று கலைக்குப் பொருந்தும், இலக்கியத்துக்குப் பொருந்தும், அறிவியலுக்குப் பொருந்தும், அரசியலுக்குப் பொருந்தும், பத்திரிகைகளுக்குப் பொருந்தும், பாராளுமன்றத்துக்குப் பொருந்தும், இயக்கங்களுக்குப் பொருந்தும், இனம் மொழிக்கும் பொருந்தும்.

ஆனால் ஒன்று புதுப்பித்தல் என்பது வளர்சிதை மாற்றமேயன்றி உறுப்புகளை உதிர்த்து விடுவதில்லை.

இந்த மாறிவரும் மின்னணு யுகத்தில் தலைமுறையின் நீளங்களே கூடக் குறைந்துவிட்டன என்றே தோன்றுகிறது.

முன்பெல்லாம் மூன்று தலைமுறைகளுக்கொருமுறை முட்டிப்பார்த்துக் கொண்டிருந்த புதுமை இன்று ஒவ்வோர் அதிகாலையிலும் ஒவ்வொரு வீட்டுக் கதவையும் தட்டிப் பார்த்துக் கொண்டேயிருக்கிறது.

புதிய நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வோர் ஆண்டும் புதியவன் மட்டுமே தேவைப்படுவான். அல்லது புதுப்பித்துக்கொண்டவன் மட்டுமே தக்க வைத்துக் கொள்ளப்படுவான்.

ஒரு மனிதன் நூறு ஆண்டுகள் வரை புகழ்பெறுவதை இனிமேல் சமூகம் பொறுத்துக் கொள்ளாது.

திரையுலகத்தின் பழைய காலங்களைத் திருப்பிப் பார்க்கிறபோது இந்த முடிந்த முடிவுக்குப் பல முன்னுதாரணங்கள் கிடைக்கின்றன.

கால வெள்ளத்தோடு நீந்தி வந்தவர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது.

மனவளமும் பணவளமும் உழைப்பு வளமும் இருந்தும் கூட ஏன் அவர்களால் நீண்டதூரம் நிலைபெற முடியவில்லை.

"எல்லாம் நேரம்தான்" என்பது நித்திரை போனவனின் கூற்று.

காலம் ஒவ்வொரு மனிதனுக்கும் பூச்செண்டுகளைத்தான் ஏந்தி நிற்கிறது. முள்ளோடு விரல் கிழித்துக் கொள்வது மனிதர்களின் முட்டாள்த்தனம்.

தத்துவங்கள், வாழ்க்கை முறைகள், அரசியல் போக்குகள் எல்லாமே தங்களைப் புதுப்பித்துத் தீர வேண்டிய ஒருகால கட்டத்தில் நின்று கொண்டிருக்கின்றன.

தமிழ்த் திரைப்பாடல்களும் சட்டை மாற்றிக் கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத முடிவுக்கு தள்ளப்பட்டிருக்கின்றன.

**புளித்துப்போன உவமைகள்,**
**சலித்துப்போன சங்கதிகள்,**
**தேய்ந்துபோன வார்த்தைகள்,**
**தீர்ந்துபோன கற்பனைகள்.**

மனிதர்களைப் புதிய நூற்றாண்டின் தார்ச்சாலைகளுக்கு அழைத்துப் போகாமல் பழைய நூற்றாண்டின் பாசிபடிந்த பாதைகளுக்கு அழைத்துச் செல்லும் அழுக்குச் சித்தாங்கள் இவைகளை விட்டுத் திரைப்பாடல்களைச் சிறை மீட்க வேண்டிய தேவை பெருகிவிட்டது.

அதேபோல் ஒரே மாதிரியான ஒலிகள், காது மடல்களைத் திருகும் பழைய தாளங்கள், பழகிப்போன வாத்திய இரைச்சல்கள் இவைகளை விட்டுத் திரை இசையும் வெளியேற வேண்டிய காலம் கனிந்து விட்டது. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல் 384

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# கர்ப்பகால பிரச்சினைகளும் தீர்வுகளும்

கர்ப்பம் தரித்தல் எல்லோராலும் மிகவும் எதிர்பார்க்கப் படுவதாகும். இது அந்த தாயின் முதலாவது பிள்ளையாக இருக்கலாம் இல்லை நான்காவது பிள்ளையாக இருக்கலாம்.

எத்தனையாவது கர்ப்பம் என்றாலும் சில சந்தேகங்கள் எல்லோரிடமும் இருக்கும். இதே மாதிரி திருமணமானவுடன் புதுமணத்தம்பதிகள் விரும்பியோ, விரும்பாமலோ எதிர்நோக்கும் ஒரு கேள்வி "இன்னும் வயிற்றில் ஒன்றும் உருவாக இல்லையா" என்பதாகும்.

கர்ப்பமாகிய முதல் மூன்று மாதங்களும் மிகவும் முக்கியமானது. இந்த ஆரம்ப கர்ப்ப காலத்தில் ஏற்படும் சில பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் பார்ப்போம்.


பெரும்பாலானவர்களுக்கு அவர்களின் ஆரம்ப கர்ப்ப காலத்தில் பெரியளவில் எந்த பிரச்சினைகளையும் வருவதில்லை. ஏனெனில் கர்ப்பம் தரித்தல் ஒரு சாதாரண நிகழ்வாகவே கருதப்படுகிறது (normal physiology). ஒரு சுகதேகியான பெண் இலகுவில் கர்ப்பம் தரிக்கும் சாத்தியங்கள் அதிகம்.

ஏதாவது வருத்தங்கள் (வலிப்பு நோய், இதய வருத்தம்) இருப்பின், தாயாக முதல் உரிய மருத்துவ ஆலோசனைகளை பெற்றுகொள்ளுதல் சிறந்தது. (Pre pregnancy counseling) தாயாகுதலை எதிர்பார்த்து இருக்கும் பெண்களுக்கு அவர்களுடைய மாத சுகவீனம் தள்ளிப் போகும் போது கர்ப்பம் தரித்துள்ளதா என்பதை மிக இலகுவில் ஒரு சிறுநீர் பரிசோதனை (urine pregnancy test) மூலம் சோதித்து அறிந்து கொள்ளலாம்.

பின்னர் அவர் தனது பகுதியிலுள்ள கிளினிக்கில் பதிந்து மேலதிக கவனிப்புகளை பெறலாம். இவ்வாறு செய்யும்போது சில அடிப்படை பரிசோதனைகளையும் மேலதிக சோதனைகளையும் செய்ய வேண்டி வரும்.

### என்னென்ன மாற்றங்கள் இந்த நாட்களில் ஏற்படும்?

பெரும்பாலானவர்களுக்கு அவர்களின் ஆரம்ப கர்ப்பகாலத்தில் உடலில் காய்ச்சல் வருவது போல் இருக்கும்.



உடலில் உள்ள மூட்டுக்கள் நோகும்.

இலகுவில் களைப்படையலாம்.

உணவு சமிபாடடைவது குறையலாம் .

சிலருக்கு புளிப்பாக வாயில் ஊறுவது போலவும் இருக்கும்.

சிறுநீர் அடிக்கடி போக வேணும் போல் இருக்கலாம்.

இப்படியான உடல் அறிகுறிகள் பிள்ளை கருவில் வளரும் போது ஏற்படும். ஆயினும் சிலருக்கு மட்டும் வைத்திய உதவியை நாடவேண்டிய தேவைகள் வரலாம். அவ்வாறான விடயங்களை நாம் பார்ப்போம்.

ஆரம்ப நாட்களில் உதிரப் போக்கு (Bleeding) சிறிதளவில் இருக்கலாம்.

சிலருக்கு உதிரப்போக்குடன் அடி வயிற்று நோவும் (Bleeding with lower abdominal pain) இருக்கலாம்.

சிலருக்கு எந்த உணவிலும் நாட்டமின்றி கூடியளவில் சத்தியும் வயிற்று பிரட்டும் இருக்கலாம் (nausea and vomiting).

இந்த அறிகுறிகள் உள்ளவர்கள் வைத்திய ஆலோசனையை நாடுதல் நல்லது.

### இரத்தப்போக்கு (Bleeding)

நோவுடன் கூடியதா அல்லது நோ இல்லாத இரத்தப்போக்கா என்பதே நாம் முதலில் கவனிக்க வேண்டியது. அத்துடன் இரத்தப் போக்கு (Bleeding) எத்தனையாவது கிழமையில் நிகழ்ந்தது என்பதும் முக்கியமானது .

எவ்வகையான இரத்தப்போக்கென்றாலும் உடனடியாக ஒரு வைத்தியரின் ஆலோசனையை பெறவும்.

ஒரு ஸ்கேன் பரிசோதனை இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவசியம்.

இதற்கான காரணங்களை முக்கியமாக இரண்டு வகைப் படுத்தலாம்.

- ஆரம்பகால கருச்சிதைவு (early miscarriage)
- கர்ப்பப்பைக்கு வெளியே தங்கிய கர்ப்பம் (ectopic pregnancy)

Capture

நோ கூடியளவில் இருந்தால் எந்த வித தாமதமும் இன்றி மருத்துவ சேவையை நாட வேண்டும். இதனால் தேவையில்லாத ஆபத்தான பின் விளைவுகளை தவிர்க்கலாம்.

இந்த இரத்தப்போக்கு சில வேளைகளில் தானாக நின்று போய்விடும். சிலரில் நீண்ட காலம் (2-3 கிழமைகள்) தொடரலாம். இன்னும் சிலருக்கு மேலதிக சிகிச்சைகள் தேவைப்படலாம்.

எதுவெனிலும் உரிய மருத்துவ சோதனைகளின் (இரத்தசோதனை, ஸ்கேன் பரிசோதனை) பின்பே சரியான காரணத்தைகண்டு பிடிக்கலாம்.

### வயிற்று பிரட்டும் சத்தியும் (Nausea & Vomiting)

அடுத்த முக்கியமான ஒரு விடயம் சத்தியும் வயிற்று பிரட்டும் ஆகும். சாதாரணமாக ஆறுகிழமையளவில் ஆரம்பித்து பன்னிரு கிழமையளவில் முடிவுக்கு வரும் ஒரு அசௌகரியம் இதுவாகும்.

பொதுவாக மருந்துகள் எதுவுமின்றி தானாகவே சத்தி நிற்கும்.

சிலரில் மட்டும் உணவோ அல்லது நீராகாரமோ எடுக்க முடியாமல் உடலில் நீரிழப்பையும் இயலாமையையும் ஏற்படுத்தும்.

இவர்கள் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற வேண்டியது அவசியம். வைத்தியசாலையில் நின்று தேவையான சிகிச்சையை பெற வேண்டி வரும். சிலருக்கு இரத்தப் பரிசோதனைகள் செய்ய வேண்டியும் வரும்.

சத்தியை நிறுத்தும் மருந்துகளும் சிலவேளைகளில் சேலைன் திரவமும் வைத்தியர்கள் பரிந்துரை செய்வார்கள். நோயின் தீவிரத்திற்கு ஏற்ற மாதிரி மருத்துவம் செய்யவேண்டி வரும்.

இலகுவில் சமிக்கக்கூடிய உணவுகளையே இந் நாட்களில் எடுக்க வேண்டும்

Dr. கந்தையா குருபரன்
பெண் நோயியல் மகப்பேற்றியல் நிபுணர், சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவ பீடம், யாழ்.போதனா வைத்தியசாலை.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான உமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கரிநாள்’ போராட்டத்திற்கு தமிழ் மக்கள் கூட்டணி ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் பெப்ரவரி 4ஆம் திகதியினை கரிநாள் எனப் பிரகடனப்படுத்தி இந் நாளில் கிளிநொச்சி நகரில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்திற்கும் பேரணிக்கும் தமிழ் மக்கள் கூட்டணி தனது பூரண ஆதரவினைத் தெரிவித்துக் கொள்கின்றது.

குறித்த விடயம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களுக்கு எதிரான கட்டமைப்பு சார் இனப்படு கொலை பல்வேறு வடிவங்களில் இன்னும் தொடர்கின்றன.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் அவர்களின் இருப்பினை இல்லாதொழிக்கும் நோக்குடன் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் மிக நுட்பமான முறையில் பறித்தெடுக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்களும் பௌத்த மயமாக்கல்களும் மிகத் தாராளமாக நடைபெறுகின்றன.

அதேநேரம் தமிழர்களை பொருளாதார ரீதியிலும் நலிவடையச் செய்யும் நோக்குடன் மட்டக்களப்பு மேச்சல் தரைகளை அத்துமீறி அபகரித்தல், எமது கடல்வளங்களைச் சுரண்டுதல் போன்ற பல அடக்கு முறைகள் தொடருகின்றன.

இந் நிலையில் நியாயமான கோரிக்கைகளை முன் வைத்து யாழ்.பல்கலைக்கழக சமூகம் முன்னெடுக்கின்ற இப் போராட்டத்திற்கு நாம் பூரண ஆதரவினை தெரிவிப்பதோடு அனைத்து தரப்பினர்களும் இப் பேரணியில் கலந்து கொள்ளுமாறும் அன்போடும் உரிமையோடும் அழைக்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-33)

# நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய தயார்

## பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் மனித உரிமைகளை மீறும் வகையில் ஏதேனும் பிரிவு இருந்தால் அதனை முன்வைக்குமாறு எதிர் தரப்புகளிடம் கோரிக்கை விடுக்கப்படுவதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.



அவ்வாறானதொரு சரத்து சுட்டிக்காட்டப்பட்டால் அதில் திருத்தங்களைக் கொண்டு வரத் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமக்குத் தெரிந்த வரையில் அதில் மனித உரிமைகளை மீறும் எந்தப் பிரிவும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி)


# வழமைக்கு திரும்பிய சுகாதார சேவைகள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் வைத்தியர்கள், தாதியர்கள் தவிர்ந்த 72 சுகாதார தொழிற்சங்கங்களின் வைத்தியசாலை பணியாளர்களினால் இரண்டு நாட்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த பகிஷ்கரிப்பு நடவடிக்கை நேற்றுக் காலையுடன் முடிவுக்கு வந்தது.

ஜனாதிபதியின் தலையீட்டின் பேரில் நிதி அமைச்சுடன் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தீர்க்கமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது என்றும் அதில் சாதகமான முடிவு கிடைக்காது விட்டால் எதிர்வரும் புதன்கிழமை முதல் மீண்டும் பகிஷ்கரிப்பு ஆரம்பிக்கும் என சுகாதார தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (நி)

# இந்திய நீர்மூழ்கிக் கப்பல் கொழும்பை வந்தடைந்தது



(கொழும்பு)

இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் “கரஞ்ச்” நேற்று சனிக்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

குறித்த நீர்மூழ்கிக் கப்பலை இலங்கை கடற்படையினர் வரவேற்றனர்.

ஐஎன்எஸ் “கரஞ்ச்” நீர்மூழ்கிக் கப்பல் உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு 5 ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறவுள்ளது. (நி)

# இலங்கை வந்தடைந்தார் தாய்லாந்து பிரதமர்

(கொழும்பு)

தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று நாட்டுக்கு வருகை தந்துள்ள அவர், இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின விழாவில் பிரதம அதிதியாக பங்கேற்கின்றார்.

இந்த விஜயத்தின் போது, ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தரப்பினருடன் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார். (நி)

# இன்று ஒரு தகவல் 26



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பெரியோர் இயல்பு

நீங்க என்ன தான் சொல்லுங்க... பெரியவங்க என்றைக்கும் பெரியவங்க தான் சார்..!

பண்டித தீனதயாள் உபாத்தியாயர் என்று ஒருத்தர். அவரிடம் ஒரு பழக்கம். தினமும் தவறாமல் ரேடியோவில செய்தி அறிக்கையை கேட்டிடுவார்.

அவர் எங்கேபோனாலும்சரி கையிலஒரு “டிரான்சிஸ்டர்” இருந்துக்கிட்டே இருக்கும். ஒரு தடவை அவர் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டு இருந்தார். செய்தி அறிக்கை ஒலிபரப்பும்நேரம்நெருங்கிகொண்டே இருக்குது. அவருக்கு எதிரிலே இன்னொருத்தர் உட்கார்ந்து இருந்தார்.

அவர் கையிலேயும் ஒரு “டிரான்சிஸ்டர்” இருந்தது. இன்னம் கொஞ்ச நேரத்திலே செய்தி அறிக்கை வரப்போகுது. தீனதயாள்ஜி எதிரே இருந்தவரைப் பார்த்து சொன்னார்.

ஐயா! உங்க டிரான்சிஸ்டரை கொஞ்சம் ஆன் பண்ணுங்களேன் நியூஸ் கேட்கலாம் என்றார்

அவருக்கு என்ன ஆச்சரியம். என்ன இது? அவரு கையிலேயும் ஒரு டிரான்சிஸ்டர் இருக்குது. அது இருக்கிறப்போ நம்ம ரேடியோவ போடச் சொல்லுறார் அப்படி என்று நேரடியாகவே கேட்டு விட்டார்.

ஏங்க உங்க கிட்டேயும் தான் ரேடியோ இருக்கு. அப்படி இருக்கிறப்போ என்கிட்ட உள்ள டிரான்சிஸ்டரை போடச் சொல்லுறீங்களே அப்படி என்றார்.

இருந்தாலும் தீனதயாள்ஜி மறுபடியும் வற்புறுத்தினார். எதிரிலே இருந்தவர் சரி என்று சொல்லி விட்டு டிரான்சிஸ்டரை வைத்தார். செய்தி அறிக்கை ஒலி பரப்பாகியது. இரண்டு பேரும் கேட்டு முடித்தார்கள். அதன் பிறகு தீன தயாள்ஜி சொன்னார்,

என்னோட டிரான்சிஸ்டர் லைசன்ஸ் நேற்றோட முடிவடைந்து விட்டது. அதை நான் மறுபடியும் புதுப்பிக்காத வரை நான் என்னோட டிரான்சிஸ்டரை உபயோகப்படுத்த முடியாது. அதனாலே தான் உங்களுடைய டிரான்சிஸ்டரை வைக்க சொன்னேன் என்றார்.

அப்போ வானொலி லைசன்ஸ் நடைமுறையில இருந்த நேரம். இது நேர்மைக்கு சிறந்த உதாரணம். இப்ப சொல்லுங்க பெரியவங்க பெரியவங்க தானே. இன்னும் ஒரு நிகழ்ச்சி கேளுங்க.

வினோபாஜி என்று ஒருவர் இருந்தார். 1931 ஆம் வருடத்திலே ஒரு நாள் ஆச்சிரமத்துக்கு வந்த கடிதங்களை எல்லாம் பிரித்து படித்து கொண்டு இருந்தார். காந்திஜியிடம் இருந்து ஒரு கடிதம். அதை பிரித்து படிக்க ஆரம்பித்தார் வினோபாஜி. படிக்கிற போது அவருடைய முகம் சுருங்கிச்சு. படித்து முடித்த பின்பு அந்த கடிதத்தை கிழித்து குப்பைக் கூடையிலே போட்டார்.

பக்கத்திலே இருந்து இதைப்பார்த்துக் கொண்ட இருந்தவருக்கு ஆச்சரியம். காந்திஜி கிட்ட இருந்து கடிதம் வந்தால் அதை ஒவ்வொருத்தரும் அரிய பொக்கிசமாக நினைக்கிறாங்க. அதை சில பேர் பத்திரப்படுத்தி வைக்கிறாங்க. அப்படி இருக்கும் போது வினோபாஜி இதை கிழித்து போட்டு விட்டாரே. அப்படி என்று திகைத்து போய் விட்டார்.

அப்படி அந்த கடிதத்தில் என்ன தான் எழுதி இருக்கு. குப்பைக் கூடையில கிடந்த துண்டு கடதாசி எல்லாம் ஒன்றாக சேர்த்து பொருத்தி படித்து பார்த்தார். அதிலே காந்திஜி என்ன எழுதி இருந்தார் தெரியுமா?

தங்களைப் போன்ற பெரிய மகானை நான் இதுவரையில் சந்தித்ததில்லை . அப்படி என்று எழுதி இருந்தார்.

என்னங்க இது... பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய கடிதத்தை இப்படி பாழாக்கி விட்டீர்களே என்று கேட்டார்.

அதுக்கு வினோபாஜி சொன்னாராம்.


பெரியவர்கள் நம் மீது வைத்திருக்கும் அன்பு காரணமாக சில தவறுகள் இழைக்கலாம்.அந்த தவறுகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது . அதனாலே தான் அந்த கடிதத்தை கிழித்து எறிந்தேன் என்றாராம். இது எளிமைக்கு ஒரு உதாரணம் .

இங்க ஒரு வேடிக்கை கவனித்தீர்களா? உங்களிடம் ஒரு உதாரணம் சொல்லணும் என்று சொன்னால் கூட நான் 1931 ஆம் வருடத்திற்கு போய் வர வேண்டி இருக்குது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு வலயமான ரஃபா நகரில் தாக்குதல் நடத்தப்போவதாக அறிவிப்பு

## அதிர்ச்சியில் சர்வதேச நாடுகள்



**(இஸ்ரேல்)**

**இஸ்ரேலினால் பாதுகாப்பான வலயமாக அறிவிக்கப்பட்டிருந்த ரஃபா நகரில் தாக்குதலை நடத்தப்போவதாக இஸ்ரேல் தற்போது அறிவித்துள்ளது.**

"எமது இஸ்ரேல் இராணுவம் கான்யூனிஸில் பணியை முடித்த பிறகு விரைவில் ரஃபா எல்லையை அடைந்து, அதன் எல்லைப் பகுதிகளில் உள்ள ஹமாஸ் பிரிவுகளை அழிக்கும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகள் பயங்கரவாதக் குழுவின் போரிடும் திறனை கடுமையாக பலவீனப்படுத்தும் என்றும் கேலண்ட் கூறியுள்ளார்".

கடந்த இரண்டு நாட்களில் மட்டும் இஸ்ரேலினால் நடத்தப்பட்ட தாக்குதலில் 105 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர்.

எனினும் இஸ்ரேலினால் பாதுகாப்பான வலயமாக அறிவிக்கப்பட்ட ரஃபா நகரை நோக்கி சுமார் 1.9 மில்லியன் பாலஸ்தீனியர்கள் இடம்பெயர்ந்தனர்.ள

இந்த நிலையில் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரின் இந்த நடவடிக்கையானது தற்போது சர்வதேச நாடுகளிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

---

## காசாவில் உயிரிழப்பு 27,000 ஐ கடந்தது



(இஸ்ரேல்)

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் படையினருக்கும் இடையே இடம்பெற்று வரும் போர் காரணமாக காசாவில் இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27,019 ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன் காயமடைந்த பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கையும் 66,139 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலியப் படைகள், அம்புலன்ஸ்கள் மற்றும் தற்காப்புக் குழுவினரை தடுப்பதால் இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பவர்களை மீட்கமுடியாமல் திணறுவதாகவும் இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பாலஸ்தீன அமைச்சகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

---

## ஜோர்தான் தாக்குதல் சம்பவம் பதில் தாக்குதலை ஆரம்பித்தது அமெரிக்கா

### இதுவரை சுமார் 85 இலக்குகள் மீது தாக்குதல்

(பக்தாத்)

ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஈரான் சார்பு குழுக்களின் நிலைகள் மீது அமெரிக்கா தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.

அமெரிக்கா இதுவரை 85 இற்கும் மேற்பட்ட இலக்குகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜோர்தானில் உள்ள தனது தளத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கான பதிலடியாகவே அமெரிக்கா இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளது.



ஈரானின் இராணுவத்தின் நிலைகள் மீதும் அதனுடன் தொடர்புபட்ட ஆயுதக் குழுக்களின் நிலைகள் மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அமெரிக்காவின் மத்திய கட்டளை பீடம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் நீண்டதூர பி 1 தாக்குதல் விமானங்கள் உட்பட பல விமானங்கள் இந்த தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)

---



## போருக்கான தயார் நிலையில் இருங்கள் இாணுவத்திற்கு உத்தரவிட்ட கிம் ஜங் உன்

### கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பதற்றம்

(பியாங்யாங்)

போருக்கான தயார் நிலையில் இருக்குமாறு வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தனது இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளமை கொரிய தீபகற்பத்தில் கடும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அண்மைக்காலமாக கடற்பகுதியில் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்திவருகிறது. இவ்வாறு ஏவுகணை சோதனை நடத்தி போர்பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்த பதற்றத்துக்கு மத்தியில் கிம் ஜாங் உன் நம்போவில் உள்ள கப்பல் கட்டும் தளத்துக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார். அங்கு சென்ற அவர் அங்குள்ள இராணுவ வீரர்களிடையே உரையாற்றும் போது,

நாட்டின் கடல்சார் இறையாண்மையை பாதுகாப்பதிலும், போர் தயாரிப்புகளை முடுக்கி விடுவதிலும் கடற்படை முக்கிய பங்கு வகிக்கிறது.

எனவே போருக்கான ஏற்பாடுகளை முடுக்கி விடுமாறு இராணுவத்துக்கு அழைப்பு விடுத்தார்.

அவரின் இந்த அறிவிப்பு கொரிய தீபகற்ப பகுதியில் மீண்டும் போர்ப்பதற்றத்தை அதிகரித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் தனது மன சக்தியின் மூலம் எதையும் சாதிக்க முடியும், தூய பண்புகளால் மலையையும் நகர்த்த முடியும். – ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்த் தலைவர்கள் இழைத்த தவறுக்கு இன்று 76 வயது

இன்று சிங்கள மக்கள் சுதந்திரம் பெற்று 76 ஆண்டுகள். அந்தத் தினத்தை தென்பகுதி இன்று கொண்டாடுகிறது.

ஆம், இலங்கையை இறுதியாக ஆட்சி செய்த பிரிட்டிஷார் இலங்கையின் சுதந்திரத்தை சிங்களவர்களின் கைகளில் ஒப்படைத்தனர்.

அப்போது ஆளுமையும் நிர்வாகப் பங்கு பற்றலும் உடைய தமிழ்த் தலைவர்கள் சிங்களவர்களிடம் கொடுக்கப்பட்ட சுதந்திரம் தமக்கும் உரியது என நம்பினர்.

அதற்கேற்றாற்போல் டி.எஸ்.சேனநாயக்க போன்ற சிங்களத் தலைவர்கள் தமிழ்த் தலைவர்களை வாலாஜப்படுத்தி, நாட்டின் ஒட்டுமொத்த உரிமையையும் அதிகாரத்தையும் தமதாக்கிக் கொண்டனர்.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்குகின்ற போது எங்கள் தமிழர் பிரதேசத்தைப் பிரித்து விடுங்கள். நாங்கள் தனித்துவமான – இறைமையுள்ள தமிழ்த் தேசமாக எங்களை நாங்களே ஆள்கிறோம் என்று தமிழ்த் தலைவர்கள் கூறியிருப்பார்களாயின், அது சர்வசாதாரணமாக நடந்திருக்கும்.

ஆனால் எங்கள் தமிழ் அரசியல் தலைவர்கள் மற்றவர்களுக்கு விசுவாசமான சேவகர்களாக இருந்தமையாலோ என்னவோ அவர்கள் தாமே தம்மை ஆளவேண்டும் என்று நினைக்கவில்லை.

இதன் விளைவாக நடந்தது என்ன? இனி நடக்கப்போவது என்ன? என்பதை நாம் கூறியாரும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது.

அந்தளவுக்கு ஈழத் திருநாட்டில் பிறந்த அத்தனை தமிழர்களும் சிங்களப் பேரினவாதத்தின் அடக்குமுறையை ஏதோவொரு வகையில் அனுபவித்துக் கொண்டே இருக்கின்றனர்.

ஆக, இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் என்று கூறுவதெல்லாம் பொதுமையானதன்று.

ஆம், இலங்கை பெளத்த சிங்கள நாடு என பெரும்பான்மை இனம் உரிமை கொண்டாடும்போது, 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை பிரிட்டிஷார் சிங்களவரிடம் ஒப்படைத்த நிகழ்வு எங்ஙனம் இலங்கையின் சுதந்திர தினமாக இருக்க முடியும் என்பதை அனைவரும் நடுவுநிலை நின்று சிந்தித்தாக வேண்டும்.

ஆக, இந்த நாட்டின் சுதந்திரம் என்பது இது வரை சிங்களவர்களுக்கானதாக மட்டுமே இருக்கிறது.

இங்கு தமிழ், முஸ்லிம் இன மக்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவே இருந்து வருகின்றனர்.

எதுஎவ்வாறாயினும் இலங்கையின் சுதந்திர தினம் என்பது இரண்டு முக்கிய விடயங்களைத் தமிழ் மக்களுக்கு எடுத்தியம்புகிறது.

அதில் ஒன்று, இலங்கையின் சுதந்திர தினம் என்று கூறப்படுவது இலங்கைக்குரியதன்று. அது சிங்களவர்களின் சுதந்திர தினம்.

மற்றையது எங்கள் தமிழினம் இந்த நாட்டில் படுகின்ற அத்தனை அவலங்களுக்கும் மூலகாரணம் எம் தமிழ்த் தலைவர்கள் விட்ட தவறு.

எனவே தவறுகள் இழைக்கப்படுமாயின் அதனை 76 ஆண்டுகள் கடந்தும் நிவர்த்திக்க முடியாது என்ற உண்மையை இன்றைய நாளில் நம் தமிழ்த் தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# எதிர்வரும் ஒக்டோபர் ஜனாதிபதி தேர்தல்

## ரணிலின் வெற்றிக்கு ஒத்துழைக்கக் கோரிக்கை

எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திலேயே ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட சம்மேளனம் நேற்று நடைபெற்றது. அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிடுவார். எனவே அவரது வெற்றிக்காக உழைக்க அனைவரும் தயாராக வேண்டும்.

இரண்டு வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர், ரணில் விக்கிரமசிங்க நாட்டை சரியான பாதைக்கு கொண்டு சென்று பொருளாதாரத்தை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றார்.

எனவே, ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து மீண்டும் ஒக்டோபர் மாதம் ஜனாதிபதித் தேர்தலில் அவரை வெல்ல வைக்க வேண்டும் என்றுபு் பாலித ரங்கே பண்டார கோரிக்கை விடுத்துள்ளார்.

(ம-7)

## ஆயுர்வேத கூட்டுத்தாபனத்திற்கு 195 மில்லியன் ரூபா இலாபம்

ஆயுர்வேத கூட்டுத்தாபனம் கடந்த வருடம் 195 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளதாக சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஈட்டப்பட்ட அதிகூடிய இலாபமாக இந்த தொகை பதிவாகியுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, 76 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் 10 இலட்சம் மூலிகைச் செடிகளை செய்கையிடும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி வரை இடம்பெறும் என இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார்.

சுதேச மருத்துவ அமைச்சு, ஆயுர்வேத திணைக்களம் மற்றும் பொது நிர்வாக அமைச்சு என்பன இணைந்து நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவு களையும் மையப்படுத்தி இந்த தேசிய வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.(ம-7)

## இலங்கை - தாய்லாந்துக்கிடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருட்கள் வர்த்தகம், முதலீடு, சுங்க செயற்பாடுகள் மற்றும் அறிவுசார் சொத்துரிமை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய சந்தை வாய்ப்புகளை மேம்படுத்தும், சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஜனாதிபதி செயலகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

அத்துடன் இலங்கை - தாய்லாந்து விமான சேவைகளுக்கு இடையிலான தாராளமயப்படுத்தப்பட்ட புதிய இரு தரப்பு விமான சேவைகள் புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஜனாதிபதி செயலகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

மேலும் இலங்கையின் இரத்தினக்கல் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (GJRTI) மற்றும் தாய்லாந்தின் இரத்தினக் கல் ஆபரண நிறுவனம் (GIT) ஆகியவற்றுக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பைப் பலப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஜனாதிபதி செயலகத்தில் கைசாத்திடப்பட்டது. (ம-7)

# பரமபிதா காட்டிய பாதை

## இரக்கம் கலந்த அன்பு

கானவில் நிகழ்ந்த திருமணநிகழ்வை எமக்குத் தரப்படும் பைபிளின் யோவான் நற்செய்தி 2:1-12காட்டுகிறது. இங்கு திராட்சை ரசம் தீர்ந்து குறைவு மேலோங்கிவிட்டது. திருமண வாழ்வுக்குள் நுழையும் எல்லோருக்கும் பிரச்சினைகளும் தேவைகளும் வருவதை இந்தக்குறைவு காட்டுகிறது. இவ்வாறு எழுகின்ற பிரச்சினைகள், கணவனுக்கும் மனைவிக்கும் தொடர்ச்சியான சலிப்பையும் சஞ்சலத்தையும் கொண்டு வருகிறது. ஆனால், இயேசுவுக்குப் பிரதான தலைமைத்துவத்தைத் தம்பதிகள் தம் திருமண வாழ்வில் அளிக்கும் போது இயேசு கானவூரில் செய்தது போலவே, அனைத்து பிரச்சினைகளுக்கும் தேவைகளுக்கும் மகிமையான தீர்வை தருவார்.

அத்திருமணத்தில் மேரிமாதா-மாரியா"அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்றார். மேரிமாதா, நான் சொன்னதை என் மகன் இயேசு கேட்டார். குறை- துயர்நிறைந்த குடும்பத்திற்கு மகிழ்ச்சி கிடைத்தது. அதுபோலவே என் மகன் சொல்வதைக் கேட்டால், துயர்நிறைந்த வாழ்வும் மகிழ்ச்சியானதாக மாறும் என்பதுதான். மரியாவின் ஆலோசனைக்குச் செவிகொடுத்து, அந்தபணியாளர்கள் இயேசு இட்ட கட்டளைகள் அனைத்திற்கும் முழுமையாகவும் உடனடியாகவும் கீழ்ப்படிந்தபடியால் உடனடியாகப் பிரச்சினை முழுவதும் தீர்ந்துவிட்டது. திருமணமானவர்கள் இயேசுவின் கட்டளைகளுக்கு முழுமையாகவும் உடனடியாகவும் கீழ்ப்படிந்து வாழ்ந்து விட்டால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இயேசு மகிமையான விடை தருவதைக் அனுபவிப்பார்கள். கானவூர் திருமணத்தில் வெறும் தண்ணீர் இயேசுவின் ஆளுகைக்குள் கணப்பொழுதில் மதுர திராட்சை இரசமாய் மாறிவிட்டது. எங்கள் இல்லத்தை இயேசுவின் ஆளுகைக்கே முற்றிலும் ஒப்புக்கொடுத்துவிட்டால் நாள்தோறும் சலிப்பாயிருக்கும் திருமண வாழ்க்கை புத்தொளியுடன் மிளிரும் என்பதனையும் இந்த திருமண நிகழ்வு சித்தரிக்கிறது.

சுதந்திரம் என்ற போர்வையை வைத்து சுற்றத்தாரை மயக்கி தாம் செல்லும் பாதைதான் சரியென சகலரையும் நம்பவைத்து தங்கள் பாலியம், சிநேகம், மற்றும் அடுத்தவனின் கணவன் - மனைவியை கைப்பற்றி சிற்றின்ப காமவெறிகளில் திழைத்து ஈற்றில் தோல்வியடைந்து அழியா அவமானத்தைச் சந்ததிக்கே வழங்கியவர்களுக்கு, இந்த கானவூர் திருமண அற்புதம் ஒரு நம்பிக்கையின் செய்தியைச் சொல்கின்றது. திராட்சை ரசம் தீர்ந்துபோன போது அவர்கள் இயேசுவிடம் வந்தார்கள். இயேசு அவர்களைக் கைவிடவில்லை. அதுபோலவே இயேசுவிடம் திரும்பி வந்தால் இயேசு கைவிடமாட்டார். அவர் எதிர்பார்ப்பதெல்லாம் அற்ப காரணங்களை அடுக்கிவைப்பதை விடுத்து "எங்கள் தோல்வியை நேர்மையாய் அறிக்கை செய்யவேண்டும்" என்பது மாத்திரமே.

"உன் தாய் ஈசபேலின் வேசித்தனமும் மாய வித்தைகளும் மிகுந்திருக்கும் வரை அமைதி எப் படி இருக்க முடியும்" என பைபிள் 2 அரசர் 9:22 விளக்குகின்றது. இந் த ஈசபேலின் ஆவியின் அர்த்தம் "இரக்கம் கலந்த அன்பு". இந்த ஆவி ஒருவருடம் வரும்போது மிகுந்த அனுதாபம் காட்டுகின்ற மாதிரி முதலில் வரும். இரக்கம் காட்டுகின்ற மாதிரி வரும். தழுவி முத்தமிடுவதுபோல் வரும். சிந்தையுடன் பரிவு காட்டுகின்ற மாதிரி வரும். மிகவும் கடவுளுக்குள் இருக்கின்ற மாதிரி வரும். தான் சொல்வதெல்லாம் சரி என்கின்ற மாதிரி உள்ளுக்குள் வரும். இதைக்காண்பவர்கள் பலர் இதில் உருகி விடுவார்கள். பின்பு இந்த ஆவி மதியிழக்கச் செய்து விடும். காம இச்சைக்குள் விழுத்தி அழித்துவிடும். இதற்குள் பலர் கடவுள் பக்தியற்று விழுந்துவிடுவார்கள். இந்த ஈசபேலின் ஆவி புகுந்த மனிதர்களின் மாயவித்தைகளும் குடும்பப் புனிதத் தன்மையை குலைத்துவிடும்.

எங்கள் மதியீனத்தினால் அந்தப் பெண்ணிடம் மனிதனிடம் வரையறை தாண்டி சென்று விட்டால்? எங்கள் அறியாமையினால் "காம இன்பத தைப் பகிர்ந்து- விழுந்து விட்டால்" ஏற்றுக் கொள்ளமுடியாதா? இச்செயல்களால் சஞ்சலமும் சங்கடமும் கொண்டிருந்தால் பிறர் எங்களை பழித்து தூற்றி நிந்தனை செய்யும் அளவிற்கு வந்து விட்டால்? கணப்பொழுதேனும் தாமதிக்காமல், இயேசுவிடம் திரும்பிவாருங்கள். இயேசு, பாவிகளுக்கு நண்பர். எங்கள் பாவங்களை மன்னிப்பதற்கு மாத்திரமல்லாமல், எங்கள் வாழ்வில் சாத்தான் சீர்குலைத்த அனைத்தையும் சுத்திகரிக்கவும் காத்திருக்கிறார். எங்கள் பாவங்களை மன்னிப்பதற்காகவும், சாத தான் எங்களுக்குப் போட்ட அனைத்து முடிச்சுகளையும் அவிழ்த்து விடுவதற்காகவுமே இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். மனமடிவிற்கு நாங்கள் கண்டிப்பாய் இடம் கொடுத்து விடக்கூடாது. கானவூர் திருமணத்தில், தேவை ஏற்பட்டவிடத்தில், தேவைக்கு அதிகமாகவே இயேசு செய்தார். அது போலவே, எங்கள் குடும்பவாழ்வில் எழும் "ஒவ்வொரு தேவைக்கும் மேலாகவே இயேசு செய்து முடிப்பார். கானவூர் திருமணத்தில் தமது மகிமையை வெளிப்படுத்திய இயேசு, எங்கள் குடும்ப வாழ்விலும் தமது மகிமையை வெளிப்படுத்துவார் என்பது உண்மை.

ம.பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்போ நிலக்கடலை, கொடித்தோடை உற்பத்தி தொடர்பில் கலந்துரையாடல்

(அக்கராயன்)

அக்கராயன் பிரதேசத்தில் ஜம்போ நிலக்கடலை, கொடித் தோடை உற்பத்தி சங்கத் தினரை ஐரோப்பிய ஒன் றியத்தின் ஆசியாவுக்கான கண்காணிப்பு அதிகாரி அமீன், நவீனமயமாக்கல் விவசாய திட்டப் பணிப்பாளர் விஜிதன், கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்களப் பணிப்பாளர் சு. கேதீஸ்வரி ஆகியோர் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

மேற்படி பயிர்ச்செய்கை களின் வளர்ச்சி எதிர்காலத்தில் பயிர்ச்செய்கையில் மேற் கொள்ள வேண்டிய முன்னே ற்றங்கள் தொடர்பாக கலந் துரையாடப்பட்டன. அக்கரா யன் பிரதேசத்தில் கொடித் தோடை மற்றும் ஜம்போ நிலக்கடலை உற்பத்தி நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் நடைபெறுகின்றமை குறிப்பிட த்தக்கது. (நி-350)

# சாந்தன் இலங்கை வர அனுமதியுங்கள்

# சிறீதரன், மனோ கூட்டாக கோரிக்கை

## சாதகமாக பரிசீலிப்பதாக ஜனாதிபதி உறுதி



(கொழும்பு)

ராஜிவ் காந்தி கொலை வழ க்கில் விடுதலை பெற்றுள்ள சாந்தனை இலங்கை வர அனுமதிக்குமாறு பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் கூட்டாக கோரிக்கை விடுத்து ள்ளனர்.

நேற்று சனிக்கிழமை நண்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்து மேற்படி கோரிக் கையை முன்வைத்தனர்.

இக்கோரிக்கையை சாதக மாக பரிசீலித்து, சாந்தன் இல ங்கை வருவதற்கு தன் வயதான தாயாரைச் சந்திக்கும் வாய் ப்பை ஏற்படுத்தித் தருவதாக ஜனாதிபதி உறுதியளித்து ள்ளார்.

இது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு தேசிய பாது காப்புக்கான ஜனாதிபதி ஆலோ சகர் சாகல ரட்னாயக்கவுக்கு, சந்திப்பின் போதே ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.



சாந்தனின் தாயாரின் கோரிக்கைக் கடிதம் மற்றும் மேலதிக தகவல்களை தரு மாறும் ஜனாதிபதி சிறீத ரன் எம்.பியிடம் கோரியுள் ளார். (நி-33-100-316)

# முல்லைத்தீவை பசுமையாக்க மரக்கன்று நடுகை ஆரம்பம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு நகரத்தில் பெருமளவு மரங்கள் அழி வடைந்து காணப்படும் நிலை யில் எதிர்காலத்தில் பசுமை யான நகரமாக முல்லைத்தீவு நகரத்தினை மாற்றுவதற் கான திட்டத்தின் அடிப்ப டையில் தற்போது ஐயாயிரம் மரக்கன்றுகள் நடுகை செய்து வருவதாக முல்லைத்தீவு மேலதிக மாவட்ட செயலாளர் சி. குணபாலன் தெரிவித் தார்.

இதேவேளை 1990 ஆம் ஆண்டிற்கு பின்னர் முல் லைத்தீவு நகரத்தில் போரி னாலும் ஆழிப்பேரலையினா லும் பெருமளவு மரங்கள் அழிவடைந்த நிலையில் முல்லைத்தீவு நகரத்தில் மர நடுகையின் முக்கியத்துவம் தொடர்பாக மாவட்டச் செய லகம், கரைதுறைப்பற்று பிர தேச செயலக கூட்டங்களிலும் கருத்துகள் தெரிவிக்கப்பட்ட டன.

குறிப்பாக முல்லைத்தீவு கட ற்கரை பிரதேசத்தில் சவுக்கு மரக்கன்றுகள் கூடுதலாக நடுகை செய்வதன் மூலம் இய ற்கை பேரிடர் ஏற்படும் போது தற்காப்பு சூழல் ஏற்படும் என வும் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில் முல்லைத்தீவில் தற்போது மரக்கன்றுகள் நடுகை நடைபெறுகின் றன. (நி-350)

# வவுனியா நகரப் பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள்



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் டெங்கு பரவலைக் கட்டுப்ப டுத்தும் நோக்கில் பிராந்திய சுகாதார சேவைகள் திணை க்களம், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணி மனை மற்றும் இராணு வத்தினர், பொலிஸார், வர்த்தக சங்கத்தினர் ஆகியோர் இணைந்து டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா பிரதேச வைத் திய அதிகாரி பிரிவில் உள்ள பல இடங்களில் நேற்று குறித்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (நி-250)

# குரங்குகளை விரட்ட வாயு துப்பாக்கிகள்

(அக்கராயன்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராமத்திற்கு குரங்குகளை விரட்டுவதற்கு வாயு துப்பாக் கிகளை வழங்குமாறு கோரி க்கை முன்வைக்கப்பட்டுள் ளது. கடந்த 31 ஆம் திகதி கரைச்சி பிரதேச ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்தில் இக்கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

தென்னைகள், வாழை கள், நிலக்கடலை, உழுந்து, பயறு, பூசணி, மிளகாய் போன்ற பயிர்கள் குரங்கு களால் அழிக்கப்பட்டு வருவதா கவும் குரங்குகளை கட்டுப் படுத்துவதற்கு வாயு துப்பாக் கிகளை பெற்றுத் தருமாறும் விவசாயிகளினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந் நிலையில் ஸ்கந்தபுரம் விவ சாயிகளுக்கு 4 வாயு துப்பாக் கிகளை பெற்றுக் கொடுப்பதற்கு கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (நி-350)

# கஞ்சாவுடன் கைது

(அக்கராயன்)

பூநகரி பள்ளிக் குடாவில் கஞ் சாவுடன் நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள் ளார்.

பொலிஸ்விசேட பணியக த்திற்கு கிடைத்த தகவ லின் படி சுற்றி வளைப்பில் ஈடு பட்ட பொலிஸார் பூநகரி பள்ளிக் குடாவில் கேரள கஞ்சா 2 கிலோ 100 கிராமுடன் நபர் ஒருவரை கைது செய்துள் ளனர்.

பூநகரி பொலி ஸாரினால் கைது செய்யப்பட்ட 43 வயதுடைய நபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படு த்தப்பட உள்ளார். (நி-350)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 550 | 400 | 400 | 510 |
| உருளைக்கிழங்கு | 200 | 170 | 180 | 200 | 160 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1000 | 1200 | 810 |
| தக்காளி | 800 | 700 | 700 | 800 | 750 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 160 | 100 |
| கோவா | 700 | 520 | 700 | 600 | 800 |
| கரட் | 1600 | 1000 | 1400 | 1200 | 1400 |
| பூசணி | 180 | 200 | 180 | 250 | 205 |
| புடோல் | 300 | 300 | 300 | 400 | 250 |
| வாழைக்காய் | 350 | 250 | 200 | 300 | 180 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 300 | 380 | 300 | 400 | 350 |
| பாகற்காய் | 650 | 500 | 600 | 600 | 525 |
| வெண்டைக்காய் | 600 | 600 | 200 | 600 | 510 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 200 | 140 |
| பயற்றங்காய் | 600 | 700 | 500 | 600 | 775 |
| லீக்ஸ் | 460 | 480 | 600 | 600 | 700 |
| பீற்றூட் | 600 | 600 | 600 | 600 | 600 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 1200 | 750 |
| முருங்கைக்காய் | -- | 2000 | 2000 | 3000 | 2000 |
| போஞ்சி | 550 | 400 | 600 | 800 | 500 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 500 | 350 | -- |
| கீரை - 1 பிடி | 60 | 100 | 100 | 100 | 70 |
| தேசிக்காய் | 200 | 300 | 200 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 80-120 | 80-100 |
| இராசவள்ளி | 450 | 400 | 400 | 500 | 400 |
| வெங்காயப்பூ | 300 | 250 | 300 | 300 | 300 |
| முள்ளங்கி | 120 | 200 | 250 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 80 | 130 |
| வல்லாரை | 80 | 40 | 50 | 80 | 70 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 200 | 100 |

# சுதந்திர தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவில் சிரமதானம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு நகரத்தில் சுத்தப்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்றது.

76 ஆவது சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு முல் லைத்தீவு நகரப் பகுதியை சுத்தப்படுத்தும் சிரமதான நடவடிக்கை கடந்த வாரம் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி திணைக்கள உத்தியோகத்தர்கள், கரை துறைப்பற்று பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகள் எனப் பலரும் பங்குபற்றினர். (நி-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின்...

பாடுகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

"புதிய நாட்டை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் இம்முறை சுதந்திர தினம் கொண்டாடப்படுகின்றது.

இவ்வாண்டு சுதந்திர தின கொண்டாட்ட பிரதம விருந்தினராக தாய்லாந்து பிரதமர் கலந்துகொள்ளவுள்ளார்.

இம்முறை சுதந்திர தின விழாவை பல்வேறு கலை நிகழ்வுகள் அலங்கரிக்கவுள்ளதுடன், முப்படைகளின் அணிவகுப்புகளும் கோலாகலமாக இடம்பெறவுள்ளன.

மரியாதை அணிவகுப்பில் இராணுவத்தை பிரதிநிதித்துவப்படுத்தி 3,461 பேர் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆயுதம் தாங்கிய வாகனங்கள் உள்ளிட்ட 69 வாகனங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

விமானப்படையை பிரதிநிதித்துவப்படுத்தி 19 விமானங்களும் இம்முறை சுதந்திர தின கொண்டாட்ட அணிவகுப்பில் கலந்துகொள்ளவுள்ளன.

7 ஹெலிகொப்டர்கள், 16 ரக 5 விமானங்கள், 3 ஜெட் விமானங்கள் என்பன இதில் உள்ளடங்குகின்றன.

இலங்கைக் கடற்படையின் 1009 உறுப்பினர்களும் இம்முறை சுதந்திர தின கொண்டாட்ட அணிவகுப்பில் இணையவுள்ளனர். (ம-7)

## மன்னாரில்...

ருந்தபோது எதிர்த்திசையில் பயணித்த கடற்படையினரின் வாகனம் பாசித்தண்டல் பகுதிக்கு திடீரென சமிக்ஞை இல்லாமல் திரும்பியபோது மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

படுகாயமடைந்த மாணவன் சிலாவத்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த மாணவன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6.40 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## இனவாதம்...

வரும் நிலையிலேயே, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிரித்தானியர்களிடமிருந்து இலங்கை பொருளாதார சுதந்திரத்தை பெற்றுக் கொண்டாலும் முழுமையான அரசியல் - பொருளாதார சுதந்திரத்தை நாம் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை.

இலங்கையில் தற்போது சுதந்திரம் என்ற ஒன்று இல்லை. நாம் கொண்டாடுவதற்கு எதுவும் இல்லை.

இனவாதம் மற்றும் மதவாதத்துடன் தொடர்புடையநெருக்கடிகளை இலங்கை நாளாந்தம் எதிர்நோக்குகிறது. இந்த இனவாத மற்றும் மதவாத பிளவை ஏற்படுத்தியது எமது ஆட்சியாளர்கள்.

சுதந்திரமாக வாழக்கூடிய நிலை இங்கு இல்லை. இதனாலேயே, எதிர்கால சந்ததியினர் வெளிநாடுகளுக்கு குடிபெயர்கிறார்கள். இன்று கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள இளைஞர்கள் வரிசையில் காத்திருக்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு மாத்திரமின்றி இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் கொண்டாட சுதந்திரம் என்ற ஒன்று இல்லை. தேசிய ஒற்றுமை இல்லை.

இந்த நிலையில், நாளைய தினம் (இன்று) நடைபெறவுள்ள சுதந்திர தினக் கொண்டாட்டம், அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும்வீண்செலவுகளின் வெளிப்பாடு.

இலங்கை மக்களுக்கு சுதந்திரமும் இல்லை; பொருளாதார சுதந்திரமும் இல்லை. அத்துடன், இலங்கையில் நாளைய தினம் (இன்று) நடைபெறவுள்ள சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பங்கேற்காது.

எமக்கு இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும், சுதந்திரம் இல்லாத நாட்டில் மேற்கொள்ளப்படும்சுதந்திர தின கொண்டாட்டங்களில் நாம் பங்கேற்க மாட்டோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## கல்வி...

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம்மொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளும் கல்வியமைச்சர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் தொழில்நுட்ப பீட வளாகத்தினையும் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார். (ம-7)

## 'யுக்திய'...

தத்தில் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் உள்ள முக்கிய போதைப்பொருள் வர்த்தகர்களை கைது செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையை, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டபோது டிரான் அலஸ் முன்னெடுத்திருக்க வேண்டுமென சட்டத்தரணிகள்ஒன்றிணைவு அமைப்பு தெரிவித்துள்ளது.

மாறாக தேர்தல்கள் நெருங்கும் போது இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருக்க கூடாதென எனவும் வலியுறுத்தியுள்ளது.

யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்பில் அதிகளவான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளதுடன், இதன்மூலம் மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கைகள் மக்களின் வாழ்க்கையில் எதிர்மறையான தாக்கங்களைமேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 4 கிலோ...

இதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை திருச்சியில் இருந்து சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவினர் இரண்டு குழுக்களாக பிரிந்து பாம்பன் மண்டபம் முந்தல்முனை மற்றும் குந்துகால் உள்ளிட்ட பகுதிகளில் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது இருசக்கர வாகனத்தில் வந்தவரை நிறுத்த சொல்லும்போது அவர் வேகமாக தப்பி ஓடினார்.

இதனை அடுத்து சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் அவரை விரட்டிப் பிடித்தனர். பின் வண்டியை சோதனை செய்தபோது சுமார் 4 கிலோ கிராம் எடையுள்ள தங்க கட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டது. (ம-7,60,285)

## பொலிஸாரின் கோரிக்கை நீதிமன்றினால் நிராகரிப்பு

இலங்கையின் 76ஆவது சுதந்திர' தினத்திற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படலாம் என கருதிய பொலிஸார் யாழ்ப்பாண நீதிமன்றம் ஊடாக தடையுத்தரவை பெற முயற்சித்த போதிலும் அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸாரினால் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் சிலருக்கு போராட்டம் நடத்த தடை விதிக்க கோரிய மனுவை யாழ்ப்பாண பதில் நீதவான் பா.தவபாலன் நேற்று நிராகரித்தார். (ம-7)

## வாழ்நாள்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் வாழ்நாள் பேராசிரியராக தரமுயர்த்தப்பட்டுள்ளார்.

பல்வேறு தொல்லியல்சார் பணிகளில் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் காத்திரமான பங்கை வகித்து வந்த நிலையில் வாழ்நாள் பேராசிரியராக தரமுயர்த்தப்பட்டுள்ளார். (ம-7)


தன நிதானய
திகதி - 2024.02.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1409
S 38 72 74 82 S
49256

மெகா பவர்
திகதி 2024.02.03
சீட்டிழுப்பு இலக்கம் 1727
C 08 51 57 62 74
13717

மஹஜன சம்பத
திகதி 2024.02.03
சீட்டிழுப்பு இலக்கம் 5379
X 3 3 3 5 9 0

லக்கி 7 VIP
திகதி 2024.02.03
சீட்டிழுப்பு இலக்கம் 205
T 9 3 7 0 3 2 T

கொவிசெத
திகதி 2024.02.03
சீட்டிழுப்பு இலக்கம் 3621
C 22 31 70 74
C
47554

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2024.02.03
சீட்டிழுப்பு இலக்கம் 688
கடகம் 02 18 56 59
24492 06

உத்தியோகபூர்வ முடிவுகள்
03.02.2024 வெற்றி வாரம் 087 வர்ணம் நீலம்
F 0 8 4 5 5 7
90354
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 28,275,912.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2353 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.03 தினம் சனிக்கிழமை
14 17 25 72 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,696,633.60
78461

சனிதா
திகதி 2024.02.03 வெற்றி வாரம் 4514
09 19 27 69 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,169,694.00
97893

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4065 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.02.03 தினம் சனிக்கிழமை
19 42 58 62 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,416,641.20
255766

J 15 17 21 56 69
1529
03.02.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 501,655,336.20

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 88,609,464/-
03 26 51 59 M
215627


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

தனங்கிளப்பில் பூநகரி பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் அருகாமையில் 8 3/4 பரப்பு காணி, சிறிய வீடு, மின் இணைப்பு மற்றும் நான்கு பக்கமும் முட்கம்பி வேலி, தென்னைகள் உள்ளடங்கியது. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**077 220 3386**

(18817)

## முகாமையாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் Fancy shop இற்கு குறைந்தது 3 வருட வேலை முன் அனுபவம் உள்ள Sale promotion முகாமையாளர் தேவை.

Call/Whatsapp CV -

**070 616 8869**

(18852)

## பணியாளர் தேவை

உரும்பிராயில் அமைந்துள்ள சூப்பர் மாக்கட்டிற்கு கீழ்வரும் பணியாளர் தேவை.

- Driver
- கூலியாள் - ஆண்
- Cashier - ஆண்/பெண்
- உதவி முகாமையாளர் (Marketing)

நேரில் வந்து தொடர்பு கொள்ளலாம்.

**077 121 5548**

(18885)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மயிலிட்டியில் கரையோர காபட் பாதையிலிருந்து 250m தூரத்தில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

பரப்பு -18 இலட்சம்

தொடர்புகளுக்கு:

**075 521 3533**

(18795)

## காணி விற்பனைக்கு

தனங்கிளப்பு கண்ணகை அம்மன் வீதியில் 3 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. நான்கு பக்கமும் முட்கம்பி வேலி, தென்னைகள், குழாய்க் கிணறு உள்ளடங்கலாக.

தொடர்புகளுக்கு:

**077 220 3386**

(18817)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8277)

## கடை வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் சிறிய அலுவலகம் அமைக்க ஏற்ற மலசலகூட வசதி கொண்ட கடை வாடகைக்கு தேவை.

**076 422 1761**

(18885)

## இராஜ மருத்துவம்

பேரறிஞர் **Dr.K.பாலசுப்பிரமணியம்**
**சிறப்பு ஆலோசகர்**

மீண்டும் யாழ்ப்பாணத்தில் பக்கவாதம், மூட்டுவாதம், சூதகவாயு, நெஞ்சுக்குத்து, நெஞ்சடைப்பு, பாலியல் குறைபாடுகள், தொய்வு, நீரிழிவு, நித்திரையின்மை, மனநோய், நோவு, விஷகடிக்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள **076 274 4488**

**வல்லை வீதி, சங்கானை**

(C-8274)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் உள்ள யாழ். மாநகர சபை குடிநீர் வழங்கும் கிணறுகள் அமைந்திருக்கும் காணிக்கு பின்புறமாக இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பலாலி வீதியில் இருந்து 400 மீற்றர் தூரத்திலும் கோண்டாவில் சந்தியில் இருந்து 1/2 கி.மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. வாங்க விரும்புவோர் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**074 058 1782**

(18877)

## காணி விற்பனைக்கு

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அண்மையில் 22 Perches (2 பரப்பு) நிலம் வணிகம் மற்றும் குடியிருப்புக்கு உகந்தது. ஹோட்டல்கள், பல்பொருள் அங்காடிகள் கட்ட உகந்த இடம் தெளிவான ஆவணங்கள் கொண்டுள்ளது. K.K.S வீதியை முகப்பாக கொண்ட 1 Perch சதுர வடிவான காணியின் விலை,பேச்சுவார்த்தைக்குட்பட்டது.

(one Perch - Price Negotiable) 16,00,000/=

**076 561 3959**

(18864)

## Zoom மூலமான வகுப்பு வரலாறு

**SB.sanu**
(பிரபல பாடசாலை ஆசிரியர்)
**(தரம் 06 - A/L வரை)**

- தரம் 10,11 paper Class
- A/L புதிய பிரிவுகள் (2024.2025 A/L)

90 புள்ளிக்கு மேல் உத்தரவாதம்

தொடர்புகளுக்கு : 077 83 43 666

(18629)

## NEW SCIENCE WORLD

கணித விஞ்ஞானப் பிரிவுகள்

**2024 Revision Classes**

**Tamil & English Medium**

Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களும் நேரடி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

| | | |
|---|---|---|
| Physics | : | R.Kumaran, R.Kugen |
| Chemistry | : | Dias, K.T.Shivakumar |
| Biology | : | N.T.Gajenthiran |
| Com.maths | : | K.Ainharan, V.Khariharan |

ஆரம்பம் : 05.02.2024(திங்கட்கிழமை)
நேரம் : 12.00pm

அனுமதிகள் 02.02.2024 தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன.

Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களுக்கு சகல மாவட்ட மாணவர்களும் இணைந்து கொள்ள முடியும்

மேலதிக விபரங்கள் மற்றும் தொடர்புகளுக்கு

021 221 6690, 077 336 4030, 075 836 4055

அலுவலக நேரம் : 8.00 am - 4.30 Pm

(C-8236)

## காணி விற்பனைக்கு

கோப்பாய் இராச பாதையில் 12 அடி பாதையுடன் கூடிய 03 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

- இக் காணி கோப்பாய் கல்வியியற் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ளது.
- விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
- பார்வையிடும் நேரம் : சனி, ஞாயிறு

தொடர்புகளுக்கு :

**077 921 3789**

(18862)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
**DBF & HDBF (10.02.2024)**
( IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம் )

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Business level - I,II (10.02.2024)

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
**aat** [ Sri Lanka]
(AA1 - 10.02.2024)

G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.
(AA2, AA3 -24.02.2024)

G.C.E. A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

**Certificate Course in English**

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

**0212223382 | 0212229149**
**0774405917**

(C-8228)

## காணி விற்பனைக்கு

இராச வீதி முகப்புடன் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

தொடர்புகளுக்கு: ஜெயம்

**077 814 7389**
**077 986 5457**

(18857)

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378**
**076 097 3127**

## காணி விற்பனைக்கு

**புத்தூர் மட்டுவில் பிரதான வீதியோரம் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன் காணிதுண்டுகள் விற்பனைக்கு உண்டு.**

**1 பரப்பு - 3 இலட்சம்**

பார்வையிடும் நேரம் :
காலை 8.30 தொடக்கம் 6.00 வரை

விலை பேசித் தீர்மானிக்கலாம்

மேலதிக விபரங்களுக்கு

**076 659 0583, 076 109 8504**

(18861)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 269 /= | Max 3Kg | |
| 1 Kg கோதுமை மா | - 183 /= | | |
| 1 Kg Prima கோதுமை | - 187 /= | | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 305 /= | Max 5Kg | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 429 /= | | |
| 1 Kg அரிசி மா | - 199 /= | | |
| 1 Kg பெரிய கடலை | - 619 /= | | |
| 1 Kg றவை | - 284 /= | | |
| 1 Kg தீட்டல்பச்சை அரிசி | - 164 /= | | |
| 10 Kg விஜிதா ஆட்டக்காறி | - 2110 /= | | |
| 425g Supiri ரின்மீன் | - 490 /= | ~~850/=~~ | |
| 180g Protinex | - 1799 /= | ~~2090/=~~ | |
| 01 Lux Soap | - 165 /= | ~~175/=~~ | |
| 01 Sunlight soap | - 140 /= | ~~150/=~~ | |
| 01 அங்கர் யோக்கட் | - 50 /= | ~~80/=~~ | |
| 01 kg சிவப்பு கௌப்பி | - 1100/= | | |

1040/=



~~1080/=~~
Max - 02

**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

வலை வீதி,
உரும்பிராய் சந்தி.

**Happy Supermarket**
**0777 8080 30**

(18885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.